12.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### திண்டுக்கல்லில் மல்லி விலை உயர்வு

திண்டுக்கல்:திண்டுக்கல்லில் வரத்து குறைந்துள்ளதால் மல்லிகை விலை இருமடங்கு உயர்ந்துள்ளது.திண்டுக்கல்லில் 971 எக்டேரில் மல்லிகை சாகுபடியாகிறது. திண்டுக்கல் வணிக வளாகத்திற்கு நாள்தோறும் 25 டன் முதல் 32 டன் வரை மல்லிகை விற்பனைக்கு வந்து கொண்டிருந்தது. புரட்டாசி மாதம் துவங்கியபின் கடந்த 10 நாட்களாக 14டன் முதல் 16 டன்னாக வரத்து குறைந்துள்ளது. இதனால், மல்லிகை விலை இருமடங்கு உயர்ந்துள்ளது.திண்டுக்கல் பூ வியாபாரிகள் சங்க நிர்வாகி சகாயம் கூறியதாவது: கடந்த மாதத்தில் கிலோ ரூ.150க்கு விற்றது. தற்போது ரூ.300 முதல் ரூ.350 வரை விற்பனையாகிறது. ஆண்டுதோறும் சீதோஷ்ண நிலை மாறுபாடு காரணமாக ஓரளவு விலை உயரும். மழை அதிகளவில் பெய்ய துவங்கியுள்ளதால்வரத்து குறைந்துள்ளது. அதன் காரணமாகவும் விலை அதிகரித்துள்ளது, என்றார்.

### இயற்கை முறையில் தயாரான சாம்பிராணி அறிமுகம்

சென்னை:நவராத்திரி விழாவை முன்னிட்டு, இயற்கை முறையில் தயாரிக்கப்பட்ட, 'கப்' சாம்பிராணியை, கதர் வாரியம் அறிமுகம் செய்துள்ளது.

கதர் வாரியம் சார்பில், கதர் ஆடைகள், சோப்புகள், ஊதுபத்தி, சந்தனம், ஜவ்வாது, தேன், காலணிகள் என, 17 வீட்டு உபயோக பொருட்கள்

தயாரிக்கப்படுகின்றன. நவராத்திரியை முன்னிட்டு, கப் சாம்பிராணி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து, துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

முழுவதும் இயற்கை பொருட்களால் தயாரிக்கப்படும் இந்த சாம்பிராணி, தொடர்ந்து, 50 நிமிடங்கள் மணம் பரப்பும். 12 கப்கள் அடங்கிய சாம்பிராணி பாக்கெட், 50 ரூபாய். மாநிலம் முழுவதும் உள்ள, கதர் வாரிய விற்பனையகங்களில் கிடைக்கும். பக்தி தொடர்பான நிகழ்ச்சிகள், சுப தினங்கள், நவராத்திரி விழாக்களில், பரிசுப் பொருளாக தரும் வகையில், அழகிய பாக்கெட்டுகளில் கிடைக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**தென் மாவட்டங்களில் கனமழை எச்சரிக்கை**

சென்னை:'அடுத்த, 24 மணிநேரத்தில், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும்' என, வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில், நேற்று மழை பெய்தது. சென்னை மற்றும் புறநகரில், இரவு நேரத்தில் பலத்த மழை பெய்தது. அதிகபட்சமாக, திருவள்ளூரில் - 9, கரூர், ஈரோட்டில், தலா - 8, தஞ்சாவூரில் - 7, வேலுார், காஞ்சிபுரத்தில், தலா - 6, திருவண்ணாமலை, திண்டுக்கல், நீலகிரியில், தலா - 5 செ.மீ., மழை பெய்தது.

'அடுத்த, 24 மணிநேரத்தில், தமிழகத்தின் வட மாவட்டங்களிலும், ஒருசில இடங்களிலும், தென் மாவட்டங்களில் கனமழையும் பெய்யக்கூடும். சென்னை நகரில், வானம் மேகமூட்டமாக காணப்படும்; இரவு நேரத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளது' என, சென்னை வானிலை மையம்தெரிவித்துள்ளது.

**கடல் மீன், இறைச்சி விற்பனை இறங்குமுகம்! புரட்டாசி மாத விரதம் எதிரொலி**



பொள்ளாச்சி: பொள்ளாச்சி பகுதியில், புரட்டாசி மாத விரதத்தின் எதிரொலியாக, இறைச்சி மற்றும் கடல் மீன்கள் விற்பனை குறைந்து, விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.தமிழ் மாதங்களில், புரட்டாசி கடவுளரின் மாதமாக இந்துக்களால் நம்பப்படுகிறது. குறிப்பாக, ராமர், கிருஷ்ணர் மற்றும் பெருமாள் கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடக்கிறது. பொள்ளாச்சி பகுதியில், புரட்டாசி மாதம் வரும் சனிக்கிழமைகளில் பொதுமக்களால் விரதமிருந்து, சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. இதையொட்டி, மக்கள் அசைவம் உண்பதை முற்றிலும் தவிர்த்து விடுகின்றனர்.இதனால், இப்பகுதியில் இறைச்சி, மீன் விற்பனையில் சரிவு ஏற்பட்டு, விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதில், கடந்த சில வாரங்களுக்கு முன்பு, ஒரு கிலோ 600 ரூபாய்க்கு விற்பனையான வஞ்சிரம் மீன், தற்போது 350- 400 ரூபாய்க்கு விற்பனையாகிறது. இதே போல், 180க்கு விற்பனையான அயிலை, 120-130க்கும், 380க்கு விற்பனையான வாவல், 280-300க்கும், 260க்கு விற்பனையான சங்கரா, 160-180க்கும், 550க்கு விற்பனையான இறால், 350-400க்கும், 450க்கு விற்பனையான மாவ்லா, 260-280க்கும், 350க்கு விற்பனையான பாறை, 200-220க்கும், 300க்கு விற்பனையான கொக்கு,

180-200க்கும், 280க்கு விற்பனையான கிளாத்தி, 140-160க்கும், 240க்கு விற்பனையான நெத்திலி, 140-160க்கும், 250-350க்கு விற்பனையான கடல் நண்டு ரகங்கள், 100-250க்கும் விலை சரிந்துள்ளது. இதில், மத்தி மீன் வரத்து மிகக்குறைவாகவே உள்ளது. பொதுவாக அதிகளவில் விற்பனையாகும் ரகமான மத்தி, வரத்து குறையும் போது, விலை ஏறுவது வழக்கம். ஆனால், தற்போது வரத்து இல்லாத நிலையிலும், வாங்குவோர் எண்ணிக்கை மிகக் குறைவாக உள்ளதால், முன்பு 140 ரூபாய்க்கு விற்பனையான ஒரு கிலோ மத்தி மீன், தற்போது 120 ரூபாய்க்கு விற்பனையாகி வருகிறது.நடைமுறைக்கு பொருத்தமில்லாமல், டேம் மீன் ரகங்கள் மட்டும் கடந்த சில நாட்களாக விலை அதிகரித்துள்ளது. முன்பு ஒரு கிலோ, 140 ரூபாய்க்கு விற்பனையான கட்லா மீன், தற்போது 160 ரூபாய்க்கும், 100க்கு விற்பனையான ஜிலேபி கெண்டை, 120க்கு விற்பனையாகி வருகிறது.மக்கள் இறைச்சி மற்றும் மீன்கள் வாங்க விரும்பாததால், வழக்கமாக ஞாயிற்றுக்கிழமைகளில் கூட்டம் மொய்க்கும் மீன் கடைகள், நேற்று ஆள் நடமாட்டம் இன்றி காணப்பட்டது. இதனால், ராமேஸ்வரம், கேரளா உள்ளிட்ட இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்ட மீன் ரகங்கள், பெரியளவில் விற்பனையாகாமல் தேங்கி இருந்தன. இது மீன் வியாபாரிகள் மத்தியில் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

## மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சி! விவசாயிகள் வேதனை



பண்ருட்டி: மரவள்ளி கிழங்கு விலை கடுமையாக வீழ்ச்சி அடைந்ததன் காரணமாக விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி வேதனையில் உள்ளனர்.

கடலூர், விழுப்புரம் மாவட்டங்களில் 10 ஆயிரம் ஏக்கரில் மரவள்ளி விவசாயிகள் பயிர் செய்துள்ளனர். மரவள்ளி கிழங்குகளை அதிகளவில் சேலம் மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் உள்ள தனியார் ஜவ்வரிசி தொழிற்சாலையினர் வாங்கி பிற வகையில் உற்பத்தி செய்கின்றனர். உணவல்லாமல் ஒட்டுபசை, ஒயிட்டினிங், நெசவுக்கான ஸ்டிரிப் பசைக்கான மூலப்பொருட்கள் தயாரிக்கப்படுகிறது.மரவள்ளி கிழங்கிலிருந்து தயாரிக்கும் ஜவ்வரிசிகளில் வடமாநிலமான மகாராஷ்டிரா, குஜராத், மத்தியபிரதேச மாநிலத்தில் தீபாவளி, தசரா பண்டிகை விரத நாட்களில் ஜவ்வரிசியை கஞ்சி வைத்து குடிப்பது பழக்கமாக உள்ளது. ஜவ்வரி பண்டிகை காலத்தின்போது மட்டுமே அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. ஆனால் வற்றல் வகைகள் தினந்தோறும் தேவை உள்ளது. இதில் விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் மரவள்ளி கிழங்கு கடந்த இரு ஆண்டுகளுக்கு முன்பு டன் 6,000 முதல் 7,500 ரூபாய் வரையிலும், கடந்தாண்டு 5,000ம் முதல் 6000 ரூபாய் வரை விலைபோனது. இந்நிலையில் இந்தாண்டு டன் 1800

ரூபாய் முதல் அதிகபட்ச விலையாக 2,500 ரூபாய் அளவிற்கே வியாபாரிகள் கொள்முதல் செய்து வருகின்றனர்.கடந்த 2013ம் ஆண்டு மரவள்ளிக்கு நல்ல விலை கிடைத்ததால், விவசாயிகள் ஆர்வத்துடன் மரவள்ளி பயிரிட்ட நிலையில் இந்தாண்டு விலை கடுமையாக விழச்சி அடைந்து அதிகபட்சமாக 2,500 ரூபாய்க்கு வியாபாரிகள் கொள்முதல் செய்வதால், மரவள்ளி சாகுபடி செய்த விவசாயிகள் பெரும் நஷ்டத்திற்கு ஆளாகி, வேதனையில் உள்ளனர்.சாத்திப்பட்டு விவசாயி ராஜேஷ் கூறியதாவது :- ஒரு ஏக்கரில் 8 முதல் 12டன் வரை மரவள்ளிகிழங்கு உற்பத்தியாகிறது. ஒரு ஏக்கர் மரவள்ளி நடவு செய்து அறுவடை செய்வதற்கு 42,000 ரூபாய் வரை செலவாகிறது. இதில் 12,000 ரூபாய்க்கு சத்துக்கான உரம் இடப்படுகிறது. ஆனால் அறுவடை செய்த பின் ஏக்கருக்கு 25,000 மட்டுமே கிடைக்கிறது. விவசாயிகளுக்கு பெருத்த நஷ்டம் ஏற்பட்டுள்ளது. கடலூார் ரெட்டிசாவடி விவசாயி உமாசங்கர் கூறியதாவது :-மரவள்ளி கிழங்கு உரிய விலையை அரசு நிர்ணயம் செய்ய வேண்டும். செயற்கையான விலையேற்றம் செய்யப்படுகிறது. சிறு, குறு விவசாயிகள் ஆட்கள் பற்றாக்குறை காரணத்திற்காக மரவள்ளி கிழங்கு பயிரிடுகின்றனர். ஆனால் மரவள்ளி விலை வீழ்ச்சி காரணமாக சிறு, குறு விவசாயிகள் பயிர் செய்ய முடியாத நிலை உள்ளது என்றார். இதுகுறித்து சேலம் ஜவ்வரிசி வியாபாரி பிரித்திவ் கூறுகையில் கடந்த இரு ஆண்டுகளுக்கு முன் கிழங்கு தட்டுபாடு காரணமாக ஒரு டன் 7500 வரை விலைபோனது. கிழங்கு அதிகளவில் விலைபோனதால் கடந்த இரு ஆண்டுகளாக மரவள்ளி உற்பத்தி அதிகரித்துள்ளது. தேவை குறைவாகவே உள்ளது. இதனால் விலை குறைந்துள்ளது. இறக்குமதி தற்போது செய்யவில்லை. வியட்நாம், தாய்லாந்து நாடுகளிலும் இங்குள்ள விலை உள்ளது என்றார்.

## திருவாலங்காட்டில் 89 மி.மீ., மழை

திருவள்ளூர்:திருவள்ளூர் மாவட்டத்தில், நேற்று, அதிகபட்சமாக திருவாலங்காட்டில், 89 மி.மீட்டர் மழையும், குறைந்தபட்சமாக, கும்மிடிப்பூண்டியில், 2 மி.மீட்டர் மழையும், பதிவாகியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, மாவட்டத்தில் அதிகபட்சமாக, திருவாலங்காட்டில், 89 மி.மீட்டர், பூண்டியில், 53 மி.மீட்டர், பள்ளிப்பட்டில், 47 மி.மீட்டர், அம்பத்துாரில், 30 மி.மீட்டர், செம்பரம்பாக்கத்தில், 26 மி.மீட்டர், திருத்தணியில், 18 மி.மீட்டர், சோழவரத்தில், 17 மி.மீட்டர், திருவள்ளூரில், 16 மி.மீட்டர், செங்குன்றத்தில், 15 மி.மீட்டர், ஊத்துக்கோட்டையில், 10 மி.மீட்டர், பூந்தமல்லி, தாமரைபாக்கம், பொன்னேரில், தலா, 5 மி.மீட்டர், கும்மிடிப்பூண்டியில், 2 மி.மீட்டர் மழை என, மொத்தம், 339 மி.மீட்டர் மழை பதிவாகியது.

## தியாகதுருகத்தில் கனமழை

தியாகதுருகம்: தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு கனமழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தியாகதுருகம், ரிஷிவந்தியம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு திடீரென கனமழை பெய்தது. தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்கு மேலாக மழை கொட்டியதால், தெருக்களில் வெள்ளம் பெருக்கெடுத்து சிறு குட்டைகள் நிரம்பின. ரிஷிவந்தியம் வனப்பகுதியை ஒட்டியுள்ள காட்டுக்குளம் நிரம்பியது. ஏரி, குளங்களுக்கு செல்லும் வரத்து வாயக்கால்களில் நீரோட்டம் அதிகரித்து பள்ளமான பகுதியில் நீர்மட்டம் உயர்ந்தது. வயல்வெளிகளில் தண்ணீர் தேங்கிநிற்கும் அளவுக்கு மழை பெய்ததால் மண்ணின் ஈரப்பதம் அதிகரித்துள்ளது. நீர் பற்றாக்குறையால் காய்ந்து வந்த கரும்பு பயிருக்கு ஓரளவு புத்துணர்ச்சியை கொடுத்துள்ளது. மானாவாரியாக சாகுபடி செய்துள்ள பருத்தி, மக்காச்சோளம் பயிர்கள்

மலர்ச்சியுடன் காட்சியளிக்கிறது.தென்மேற்கு பருவமழை முற்றிலும் ஏமாற்றிய நிலையில் தற்போது பெய்துள்ள மழை விவசாயிகளுக்கு மகிழ்ச்சியையும், நம்பிக்கையும் ஏற்படுத்தியுள் ளது. இனி வரும் தினங்களில் வடகிழக்கு பருவமழை மூலம் நீர் நிலைகள் நிரம்பும் என்று எதிர்பார்க்கின்றனர்.

## இயந்திர நடவு செய்யும் விவசாயிகளுக்கு அரசு மான்யம்

செஞ்சி: இயந்திர நடவு செய்யும் விசாயிகளுக்கு அரசு மான்யம் வழங்கப்படும் என வேளாண்மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார். வல்லம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் ரவீந்திரன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பு.வல்லம் வட்டாரத்தில் தற்போது சம்பா பருவத்திற்கான நாற்றங்கால் விடும் பணி நடந்து வருகிறது. மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, ஏடிட்டி 37, ஏடிட்டி 39 நெல் ரகங்கள் பரவலாக பயிரிடப்பட்டு வருகின்றன. இந்த ஆண்டு இயந்திரம் மூலமாக நெல் நடவு செய்யும் விவசாயிகளை அரசு ஊக்கப்படுத்த முடிவு செய்துள்ளது. எனவே இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு ஆயிரத்து 200 ரூபாய் மானியமாக வேளாண்மைத்துறை மூலம் அரசு வழங்க உள்ளது. வல்லம் பகுதியில் 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் இந்த திட்டம் செயல்படுத்த உள்ளனர். விவசாயிகளுக்கான மான்ய தொகையை விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகள் இயந்திரம் மூலம் நடவு செய்ததற்கான ரசீது, அடங்கல், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், நடவு செய்தபோது எடுத்த தேதியுடன் கூடிய புகைப்படம், ஆதார் அட்டை நகல் அல்லது வாக்காளர் அட்டை நகல், குடும்ப அட்டை நகலுடன் உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.மேலும் வல்லம் வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொண்டும் பயன்பெறலாம் என ரவீந்திரன் தெரிவித்துள்ளார்.

## தரமற்ற ஜவ்வரிசி உற்பத்தியால் விலை வீழ்ச்சி ; இயற்கை முறை உற்பத்தியாளர்கள் சங்கம் புகார்

ஆத்துார் : "ரசாயனம் கலந்த தரமற்ற ஜவ்வரிசி உற்பத்தி செய்ததால், ஜவ்வரிசி நுகர்வோர் எண்ணிக்கை குறைந்ததோடு, விலை வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது," என, தமிழக இயற்கை முறை ஜவ்வரிசி உற்பத்தியாளர்கள் சங்க தலைவர் முத்துலிங்கம் கூறினார்.

இது குறித்து நிருபர்களிடம் அவர் கூறியதாவது:கடந்த, 1940 முதல், 2000 ஆண்டு வரை, ஜவ்வரிசியில், கலப்படம் இல்லை. மரவள்ளி கிழங்கு தோல் உரிக்காமல் அரவை செய்ததால், ஜவ்வரிசியை வெண்மையாக்க ரசாயன கலவை, மக்காச்சோள மாவு, சாக்பீஸ் மாவு கலந்ததால், ஜவ்வரிசி தரம் குறைந்து, இவற்றை விற்பனை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.2015-16ல், மரவள்ளி கிழங்கு அரவை பருவம் துவங்கிய நிலையில், மூன்று லட்சம் மூட்டை ஜவ்வரிசி விற்பனையாகாமல் தேங்கி கிடக்கிறது. ரசாயனம் கலந்த தரமற்ற ஜவ்வரிசி உற்பத்தி செய்ததால், 15 ஆண்டுகளில் நுகர்வோர் எண்ணிக்கை குறைந்து விட்டது. உற்பத்தியாகும் ஜவ்வரிசி விற்க முடியாமல் விலை வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மரவள்ளி கிழங்கு மாவில் இருந்து, இயற்கையான ஜவ்வரிசி உற்பத்தி செய்வதற்காக, இச்சங்கம் துவங்கப்பட்டது. சில இடங்களில், தரமற்ற ஜவ்வரிசி உற்பத்தி செய்து வந்ததால், விவசாயிகள் முன்னேற்ற சங்க செயலாளர் சந்திரசேகர், ஜூலை மாதம், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.வழக்கை விசாரித்த நீதிமன்றம், 'மரவள்ளி கிழங்கு தோல் முற்றிலும் நீக்கி, ரசாயனம் கலப்பு இல்லாமல் இயற்கை முறையில், ஜவ்வரிசி உற்பத்தி செய்ய வேண்டும்' என்றது. மேலும்

கலப்படத்துக்கு வழி செய்யும் ஈர மாவு விற்பனையை முற்றிலும் தடை செய்து, செப்டம்பர், 7ம் தேதி, உத்தரவிட்டது.

இயற்கை முறை உற்பத்தியாளர்களால், மரவள்ளி கிழங்கு விலை வீழ்ச்சியடைந்ததாகவும், சேலம் சேகோ சர்வ் முன், உண்ணா விரதம் இருப்பதாக, ஆத்துார் ஜவ்வரிசி, ஸ்டார்ச் உற்பத்தியாளர்கள் சங்கம் பொய்யான தகவலை தெரிவித்துள்ளது. மரவள்ளி அரவை துவங்க உள்ளதால், மரவள்ளி தோல் உரித்து, கலப்படம் இல்லாமல், இயற்கை முறையில் ஜவ்வரிசி உற்பத்தி செய்து, பல கோடி நுகர்வோர், விவசாயிகளை பாதுகாக்க, மரவள்ளி கிழங்கிற்கு உரிய விலை வழங்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு, அவர் கூறினார்.

## மஞ்சள் குவிண்டாலுக்கு ரூ.1,000 உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி

ஆத்துார் : ஆத்துார் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில், மஞ்சள் குவிண்டாலுக்கு, 1,000 ரூபாய் உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

ஆத்துார், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரந்தோறும் பருத்தி மற்றும் மஞ்சள் ஏலம் நடந்து வருகிறது. நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த, 50 விவசாயிகள், 700 மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.இதில் விரலி மஞ்சள், குவிண்டால் அதிகபட்சமாக, 9,499 ரூபாயும், குறைந்தபட்சமாக, 6,399 ரூபாயும், உருண்டை மஞ்சள், குவிண்டால் அதிகபட்சமாக, 8,209 ரூபாயும், குறைந்தபட்சமாக, 5,989 ரூபாயும் ஏலம் போனது. மொத்தம், 40 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது. கடந்த வாரத்தை விட, விரலி

மற்றும் உருண்டை மஞ்சள் குவிண்டாலுக்கு, ஆயிரம் ரூபாய் விலை உயர்ந்துள்ளதால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## வேப்பம்புண்ணாக்குடன் யூரியா நெற்பயிருக்கு இட யோசனை

ஈரோடு : தற்போது பெய்து வரும் மழைக்கு, நெல் நடவு செய்துள்ள விவசாயிகள், மேலுரம் இட வேண்டுமென, வேளாண் இணை இயக்குனர் கார்த்திகேயன், யோசனை தெரிவித்தார். ஈரோடு மாவட்டத்தில், நெல், வாழை, கரும்பு, மஞ்சள், மக்காச்சோளம் போன்ற பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நடப்பு பருவத்தில் மாவட்ட அளவில், 30 ஆயிரம் ெஹக்டர் வரை நெல் சாகுபடி செய்யப்படும் என, எதிர்பார்க்கப்படுகிறது. தற்போது, 18,000 ெஹக்டேர் சாகுபடி நடந்துள்ளது. கொடுமுடி தவிர பிற இடங்களில் பவானி, காலிங்கராயன், கீழ்பவானியில் தண்ணீர் திறக்கப்பட்டதால், நெல் நடவுப்பணிகள் தீவிரமாக நடந்து வருகிறது.இந்நிலையில், கடந்த, ஒரு வாரத்துக்கு மேலாக தொடர்ச்சியாக பெய்து வரும் மழையால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இம்மழையால், தண்ணீர் கட்டுதல், நடவுப்பணி, களை அகற்றுதல் போன்ற பணிகள் சுலபமாகும். இம்மழை குறித்து, வேளாண் இணை இயக்குனர் கார்த்திகேயன் கூறியதாவது: இம்மழை, மொத்த விவசாயத்துக்கும் ஏற்றதாகும். நெல் நடவு செய்துள்ள விவசாயிகள், இன்னும், 40 நாட்களுக்கு மருந்து அடிக்க தேவை இல்லை எனும் அளவுக்கு மழை பெய்துள்ளது. இம்மழையால், பூச்சி தாக்குதல் போன்ற பிரச்னை எழாது.களை எடுத்துவிட்டு, 15 நாட்களுக்கு ஒரு முறை என, மூன்று முறை, வேப்பம் புண்ணாக்கு கலந்த யூரியாவை மேலுரமாக இட வேண்டும். ஒரு ஏக்கருக்கு, 12 கிலோ யூரியா, 3 கிலோ வேப்பம் புண்ணாக்கு சேர்த்து தெளித்தால், அதிகமாக துார்கட்டி, நல்ல விளைச்சல் தரும். பிற பயிர்களுக்கும், இம்மழை பெரிய அளவில் பாதிப்பை ஏற்படுத்தாது. பூச்சி தாக்குதலை மட்டும்

கண்காணித்து, மருந்து அடித்தால் நல்ல மகசூல் பெறலாம். தற்போதைய மழை மற்றும் தொடர் வளர்ச்சிக்கு, அனைத்து பயிருக்கும் தேவையான உரம், ஆர்டர் செய்யப்பட்டுள்ளது. தட்டுப்பாடு இன்றி, உரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

### நேந்திரம் வாழை ஏறுமுகம் ரூ.7 லட்சத்துக்கு விற்பனை

சத்தியமங்கலம் : சத்தியமங்கலத்தில் நடந்த வாழை ஏலத்தில், நேந்திரம் வாழை விலையில் ஏற்றம் இருந்தது. சத்தியமங்கலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாழை தார் ஏலம் நடந்தது. சத்தியமங்கலம் மற்றும் பவானிசாகர் பகுதியில் இருந்து, விவசாயிகள் அதிகளவில் வாழை விற்பனை கொண்டு வந்தனர்.கடந்த ஏலத்தில், ஒரு கிலோ கதளி, 26 ரூபாய்க்கு விற்பனையானது. நேற்று கிலோவுக்கு, 10 காசுகள் மட்டுமே அதிகரித்தது. இதேபோல் கடந்த வாரம் நேந்திரம் ரக வாழையும், விலை குறைந்து கிலோ ஒன்று, 20 ரூபாய் வரை மட்டுமே விற்பனையானது. ஏலத்தில், நேந்திரம் வாழை மட்டும் விலை அதிகரித்து, ஒரு கிலோ, 28 ரூபாய் வரை விலை போனது. செவ்வாழை தார் ஒன்று, 550 ரூபாய் வரை விற்பனையானது. மொத்தம், 7 லட்சம் ரூபாய்க்கு வாழை விற்பனையானது.

### பவானிசாகர் அணையில் தண்ணீர் திறப்பு அதிகரிப்பு

சத்தியமங்கலம் : பவானிசாகர் அணையில் இருந்து, தண்ணீர் திறப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஈரோடு மாவட்டத்தில், பரவலாக கனமழை பெய்தது. இதனால் கடந்த, 5ம் தேதி முதல், பவானிசாகர் அணையில் இருந்து பவானி ஆற்றில் தண்ணீர் திறப்பது நிறுத்தப்பட்டது.

மழை குறைந்ததால், 8ம் தேதி வினாடிக்கு, 600 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டது. நேற்று முன்தினம், 900 கன அடியாக உயர்த்தப்பட்டது. இந்நிலையில், நேற்று முதல், பவானிசாகர் அணையில் இருந்து, பவானி ஆற்றில் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை மற்றும் காலிங்கராயன் பாசனத்திற்காக வினாடிக்கு 1200 கன அடி தண்ணீர் திறக்கப்படுகிறது. கீழ்பவானி வாய்க்காலில் வினாடிக்கு, 2 ஆயிரத்து 200 கன அடி தண்ணீர் செல்கிறது.அணை நீர்மட்டம், 62.80 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு, ஆயிரத்து, 37 கன அடி தண்ணீர் வந்தது.

## சூறாவளி காற்றுடன் பலத்த மழை; நிவாரண உதவி வழங்க கோரிக்கை

குளித்தலை : குளித்தலை அருகே, சூறாவளி காற்றுடன் பெய்த பலத்த மழையால், வீடுகள் சேதமடைந்து, மின் கம்பங்கள் சரிந்தன. மீட்பு பணியில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டுள்ளது.

கரூர் மாவட்டம், குளித்தலை அடுத்த, தமிழ்சோலை, மந்தை, தெற்குபட்டி, அக்ரஹாரம் பகுதியில், நேற்று முன்தினம் இரவு பெய்த மழையில், 10க்கு மேற்பட்ட வீடுகள் சேதமடைந்தது. இதனால், பல லட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்ட வில்லை வீடுகள், ஆஸ்பிட்டாஸ் வீடுகள் சேதமடைந்தது. விவசாய நிலத்தில் உயர் மின் அழுத்த மின் கம்பி மற்றும் மின் கம்பங்கள், பத்துக்கும் மேற்பட்டவை சரிந்தது.தகவலறிந்த மின்வாரிய ஊழியர்கள், சாலையிலும் விவசாய நிலத்திலும் அறுந்து கிடந்த மின்கம்பி மற்றும் மின்கம்பத்தை அப்புறப்படுத்தினர். வருவாய் துறையினர், மின்வாரிய துறையினர் மீட்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.பாதிக்கப்பட்ட மக்கள், நிவாரணம் வழங்கக்கோரி, வருவாய்துறையினரிடம் கோரிக்கை மனு அளித்தனர். சூறாவளி காற்றுடன் தொடர் மழை பெய்ததால், அப்பகுதியில் பெரும் இழப்பு ஏற்பட்டது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

## தென் தமிழகத்தில் பலத்த மழைக்கு வாய்ப்பு

தென் தமிழகத்தில் ஆங்காங்கே திங்கள்கிழமை பலத்த மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

தென் மேற்கு பருவ மழை காலத்தில் ஏற்பட்ட வெப்பச்சலனத்தால், தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. கடந்த இரண்டு நாள்களாக, சென்னை, புறநகர்ப் பகுதிகளிலும் இரவில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகிறது. தொடர்ந்து ஞாயிற்றுக்கிழமை இரவிலும் பரவலாக மழை பெய்தது.

கடந்த 24 மணி நேரத்தில், திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு 90 மி.மீ, கரூர் மாவட்டம் பஞ்சட்டி, ஈரோடு மாவட்டம் தளவாடியில் 80 மி.மீ, தஞ்சாவூர் மாவட்டம் கிராண்ட் அணைக்கட்டில் 70 மி.மீ, காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர், வேலூர் மாவட்டம் காளவாயில் 60 மி.மீ, திருவண்ணாமலை மாவட்டம் செய்யூர், திருவள்ளூர் மாவட்டம், பூண்டி, வேலூர் மாவட்டம் ஆலங்காயம், காவேரிப்பாக்கம், திருவண்ணாமலை மாவட்டம் போளூர், திண்டுக்கல் மாவட்டம் காமாட்சிபுரம், நீலகிரி மாவட்டம் உதகமண்டலம், திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு, வேலூர் உள்ளிட்ட இடங்களில் 50 மி.மீ. மழை பதிவானது.

பலத்த மழை: தென் தமிழகத்தில் திங்கள்கிழமை ஆங்காங்கே இடியுடன் கூடிய பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. அதாவது, ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல்,

சிவகங்கை, விருதுநகர் உள்ளிட்ட தென் மாவட்டங்களில் ஆங்காங்கே பலத்த மழையும், மற்ற மாவட்டங்களில் ஒரு சில இடங்களில் லேசான மழையும் பெய்யும். அடுத்து வரும் நாள்களிலும் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழையை எதிர்பார்க்கலாம். சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## பாரம்பரிய மருத்துவத்தின் வெற்றி

சீனாவைச் சேர்ந்த இயற்கை மருத்துவரான யூயூ தூவுக்கு இந்த ஆண்டுக்கான மருத்துவத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவத்திற்கான நோபல் பரிசைப் பெறும் முதல் சீனர் என்ற பெருமையைப் பெறுகிறார் இவர். மலேரியாவைக் குணப்படுத்தும் சீனப் பாரம்பரியத்தில் அமைந்த, இயற்கை முறை மருந்தான ARTEMISININ-ஐ கண்டுபிடித்தவராவார். நோபல் பரிசு அறிவிப்பைத் தொடர்ந்து, ஆசியாவின் பாரம்பரிய மருத்துவ முறையின் மீது, மேற்கத்திய ஊடகங்களின் பார்வை திரும்பியுள்ளது. இன்றுவரைக்கும், தமிழ்நாட்டில் உயிர்க் கொல்லி நோய்களில் ஒன்றாகவே மலேரியா திகழ்கிறது. கொசுவால் பரப்பப்படுகின்ற மலேரியா, மனிதனின் சிவப்பு ரத்த அணுக்களைக் கைப்பற்றி அவற்றை அழிக்கும் ஆற்றல் வாய்ந்தது. காய்ச்சலில் ஆரம்பிக்கும் மலேரியா, மூளையைப் பாதிப்பதுடன், மரணத்தையும் ஏற்படுத்தும். இன்றும் உலகம் முழுவதும் ஆண்டொன்றுக்கு சுமார் 4 லட்சத்து 50,000 பேர் மலேரியாவால் உயிரிழக்கிறார்கள்.

இதைவிட, உலக மக்கள்தொகையில் சுமார் 340 கோடி மக்கள், அதாவது உலக மக்கள் தொகையில் பாதிக்கும் அதிகமானவர்கள், எந்த நேரத்திலும் மலேரியாத் தொற்றுக்குள்ளாகக் கூடிய அபாயத்தில் உள்ளதாக

சொல்கிறது உலக சுகாதார அமைப்பு.

1960-களில் கிழக்கு சீனாவில் மிகப் பெரிய ஆள்கொல்லி நோயாக மலேரியா உருமாறியிருந்தது. தினந்தோறும் பல்லாயிரக்கணக்கானவர்கள் மலேரியாவின் தாக்கத்தால் இறந்து போனார்கள். சீனப் புரட்சியின் விளைவாக மேற்கத்திய மருத்துவம் படித்தவர்கள் எல்லாம் சீனாவை விட்டு வெளியேறியதால் போதுமான மருத்துவ வசதிகளும் கிடைக்கவில்லை.

இந்தக் காலக்கட்டத்தில்தான் ஹோசிமின் தலைமையிலான வடக்கு வியத்நாம் போராளிகளும் அமெரிக்காவுக்கு எதிராகப் போர் புரிந்து வந்தனர். மாவோ தலைமையிலான சீனாவும், ஹோசிமினின் வடக்கு வியத்நாமும் கம்யூனிச நாடுகள் என்ற அடிப்படையில் நட்புறவுடன் இருந்து வந்தன.

அமெரிக்கப் படையணியின் துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியாவதைவிட அதிகளவு வியத்நாம் போராளிகள் மலேரியாவுக்குப் பலியானார்கள். மலேரியாவுக்கு மருந்தாக அந்தக் காலத்தில் உபயோகிக்கப்பட்ட CHLOROQUINE என்ற ரசாயனத்திற்கு எதிராக மலேரியாக் கிருமிகள் தம்மை தகவமைத்துக் கொண்டன. சீனாவுக்கும், அதன் நட்பு நாடாகிய வடக்கு வியத்நாமுக்கும் ஒரே நேரத்தில் பெரிய தலைவலியாக மலேரியாவின் தாக்கம் உருவாகியது.

இந்நிலையில்தான், மாவோ சேதுங், ஒரு ரகசியமான விஞ்ஞானப் புரட்சிக்கான முதல் வித்தை 1967-ஆம் ஆண்டு மே மாதம் 23-ஆம் தேதி ஊன்றினார். ஐந்தாம் மாதம் 23-ஆம் தேதி ஆரம்பிக்கப்பட்டதால் இது "புராஜெக்ட் 523' என்ற பெயரில் அழைக்கப்பட்டது. இதை வரலாற்றாசிரியர்கள் "ராணுவ விஞ்ஞானப் புரட்சி' என்கிறார்கள்.

மாவோவின் கட்டளைக்கிணங்க, ஆள்கொல்லி நோயான மலேரியாவுக்கு மருந்து கண்டுபிடிக்க, சீன மருத்துவவியலாளர்கள், விஞ்ஞானிகள் கொண்ட பல நூறு ஆளுமைகள் ஒரே நேரத்தில் களத்தில் இறங்கினார்கள்.

இந்த ஆராய்ச்சியில் "சீனாவின் பாரம்பரிய மருத்துவக் கழகம்' சார்பாகக் கலந்து கொண்டவர்தான் யூயூ தூ. சீனாவின் பாரம்பரிய மருத்துவத்தையும், மேற்கத்திய மருத்துவத்தையும் முறைப்படிக் கற்றவர் என்பது இவருக்குப் பலம் சேர்ப்பதாக அமைந்தது. ஆய்வுக் காலத்தில் சீனாவின் மூலை முடுக்கெல்லாம் பயணம் செய்து, சீன மக்கள் நோய்களை எதிர்க்க பயன்படுத்தும் சுமார் 2000 பாரம்பரிய நோய் எதிர்ப்பு முறைகளைப் பட்டியலிட்டார் யூயூ தூ.

சீனாவின் ஒரு பிராந்திய மக்கள் காய்ச்சல் வரும்போதெல்லாம் ARTEMISIA ANNUA என்ற தாவரத்தின் மரப்பட்டைகளைக் காய்ச்சி மருந்தாக உள்கொண்டு வந்தனர். காய்ச்சலும் சில மணி நேரங்களில் குணமடைந்து வந்தது.

மலேரியாவின் ஆரம்ப அறிகுறிகூட இப்படியான காய்ச்சலாகவே இருக்கும். இதைப் புரிந்து கொண்ட யூயூ தூ, அந்தத் தாவரத்தின் பட்டைகளை ஈதர் என்ற ரசாயனத்துடன் கலந்து கொதிக்க வைத்த போது சீனாவே தேடிக் கொண்டிருந்த மலேரியாவிற்கான மருந்து தயாரானது.

1600 ஆண்டுகளுக்கு முன்பாகவே சீன இலக்கியங்களில் இது சம்பந்தமான குறிப்புகள் உள்ளனவாம். மலேரியாவிற்கெதிராகக் கண்டுபிடிக்கப்பட்ட மேற்கத்திய மருந்துகளுக்கெதிராக மலேரியக் கிருமிகள் தம்மை தகவமைத்துக் கொண்டன. ஆனால், ARTEMISININ மருந்துக்கெதிராக, மலேரியாக் கிருமிகளால் தம்மைத் தகவமைத்துக்கொள்ள முடியவில்லை. இன்றுவரை உலகெங்கும் வெற்றிகரமான மருந்தாக அது திகழ்கிறது.

"புராஜெக்ட் 523' ஆரம்பிக்கப்பட்டு சரியாக பத்து வருடங்களுக்குப் பின் இவருடைய கண்டுபிடிப்பு வெளியிடப்பட்டது. ஆனால், யூயூ தூவின் பெயர் வெளியிடப்படவில்லை.

சில வருடங்கள் முன்பு வரை ARTEMISININ மருந்தைக் கண்டு

பிடித்தவர்கள் யார் என்பது மர்மமாகவே இருந்து வந்தது. "தனி நபர்களைவிட தேசமே பிரதானம்' என்ற சீனாவின் கொள்கையால் இதுவரை முறையான அங்கீகாரம் பெறாமல் இருந்தவர் இந்த நோபல் பரிசு மூலமாக, தனது 84-வது வயதில், சர்வதேசத்தின் கவனத்தைப் பெறுகிறார்.

"சீனாவின் பாரம்பரிய மருத்துவம் உலகத்திற்கு கொடுத்த கொடை இது' என உலக நாடுகள் பாராட்டுகின்றன. இந்த நோபல் பரிசை, சீன மருத்துவ முறைக்குக் கிடைத்த அங்கீகாரம் என சீனப் பத்திரிகைகளில் எழுதுகிறார்கள்.

"சீனப் பாரம்பரிய மருத்துவத்தின் பெருமையை உலகெங்கும் உணர ஆரம்பித்துள்ளனர். அதன் ஓர் அடையாளமே இந்த நோபல் பரிசு' என்கிறார் சீனப் பிரதமர் லீ கெகியாங்.

எவ்வளவுதான் மேற்கத்திய விஞ்ஞானங்கள் வளர்ச்சி அடைந்தாலும். பாரம்பரிய மருத்துவம்தான் முடிவான வெற்றியாளர் என்பதை இந்த நோபல் பரிசு வெளிப்படுத்துகிறது என்றால் அது மிகையல்ல.

## வேளாண்மைத் துறை சார்பில் இடு பொருள்கள் அளிப்பு

வேளாண்மைத் துறை சார்பில் இடு பொருள்கள், விசை உழுவை இயந்திரம் வழங்கும் விழா படப்பை வேளாண்மை விரிவாக்க மையத்தில் அண்மையில் நடைபெற்றது.

படப்பை வேளாண்மை உதவி இயக்குநர் ஜோசப் ஹெக்டர் தலைமை வகித்தார். மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் சீதாரமன் முன்னிலை வகித்தார். குன்றத்தூர் ஒன்றியக் குழுத் தலைவர் பழனி பங்கேற்று, படப்பை, அதன் சுற்று வட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த 6 விவசாயிகளுக்கு ரூ. 2,000 மதிப்புள்ள விவசாயப் பொருள்களை

இலவசமாக வழங்கினார். மேலும் நடுவீரப்பட்டு பகுதியைச் சேர்ந்த விவசாயிக்கு தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ. 75,000 மானியத்தில் விசை உழவை இயந்திரத்தை வழங்கினார்.இதில் நடுவீரப்பட்டு ஊராட்சித் தலைவர் சாதனா சீனிவாசன், எழிச்சூர் ஊராட்சித் தலைவர் ராமசந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## வண்டலூர் உயிரியல் பூங்காவில் குஞ்சு பொரித்த நெருப்புக் கோழி



சென்னை வண்டலூர் உயிரியல் பூங்காவில் நெருப்புக் கோழி வெள்ளிக்கிழமை குஞ்சு பொரித்தது.

சென்னை வண்டலூர் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் பார்வையாளர்களைக் கவரும் வகையில் நெருப்புக் கோழிகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன. இங்குள்ள நெருப்புக் கோழி ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை குஞ்சு பொரித்தது. இதையும் சேர்த்து தற்போது வண்டலூர் உயிரியல் பூங்காவில் நெருப்புக் கோழிகளின் எண்ணிக்கை 12-ஆக உயர்ந்துள்ளது.

ஆப்பிரிக்காவில் பரந்த நிலப் பகுதிகளிலும், சவானா புல்வெளிப் பகுதிகளிலும் காணப்படும் நெருப்புக் கோழிகள் உயிரியல் பூங்காக்களில் இயற்கையாக அடைகாத்து குஞ்சு பொரிப்பது அரிதானதாகும்.

இந்தியாவில் உள்ள உயிரியல் பூங்காக்களில் இந்தப் பூங்காவில் பராமரிக்கப்படும் நெருப்புக் கோழிகள் மட்டுமே இயற்கையான முறையில் அடைகாத்து குஞ்சு பொரிப்பது குறிப்பிடத்தக்கது.

ஆண், பெண் இரண்டும் சேர்ந்தே அடைகாப்பது, குஞ்சுகளைப் பராமரிப்பது இந்தப் பறவைகளிடம் காணப்படும் சிறப்பம்சமாகும்.

கடந்த 2008-இல் காட்டுப்பாக்கம் கால்நடை ஆராய்ச்சி நிலையத்திலிருந்து ஒரு ஆண், ஒரு பெண் நெருப்புக் கோழிகள் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவுக்குக் கொண்டு வரப்பட்டன.

இந்த இரு நெருப்புக் கோழிகளும் இணை சேர்ந்து முட்டையிட்டு ஐந்து முறை அடைகாத்து 16 குஞ்சுகளைப் பொரித்துள்ளன.

இந்தப் பறவை பார்வையாளர்களை வெகுவாகக் கவர்வதால் இந்தியாவில் உள்ள இதரப் பூங்காக்கள் இதைக் காட்சிப்படுத்த மிகவும் ஆர்வம் கொண்டுள்ளன. இதனால் விலங்குகள் பரிமாற்ற முறையில் இந்தப் பறவையைப் பெறுவதற்கு அதிகப்படியான கோரிக்கைகள் வருகின்றன. இதரப் பூங்காக்களுக்குக் கொடுப்பதன் மூலம் புதிய உயிரினங்களைப் பெறுவது சாத்தியமாவதுடன் அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவின் உயிரினங்களின் எண்ணிக்கை உயர்வதற்கும் காரணமாகவுள்ளது.

இந்தப் பூங்காவிலிருந்து இதுவரை 6 நெருப்புக் கோழிகள், விலங்குகள் பரிமாற்ற முறையில் இதரப் பூங்காக்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளன.

இதற்கு பதிலாக, காட்டுக் கழுதை, புருவக் கொம்பு மான், சதுப்பு நில மான், கருப்பு அன்னம், நீல மஞ்சள் மக்கா கிளிகள், வல்லாபி, தங்க நிறக் கோழிகள் ஆகியன பெறப்பட்டுள்ளன.

நெருப்புக் கோழிகள் குறித்த சிறுகுறிப்பு: நெருப்புக் கோழிகள் பறக்கா பறவைகள் குடும்பத்தைச் சேர்ந்ததாகும். கிவி, ஈமு, ரியாஸ், கேப்ஸாவரி போன்ற பறவைகள் நெருப்புக் கோழி பறவை வரிசையில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. பறவைகளிலேயே நெருப்புக் கோழி பல சிறப்புகளைப் பெற்றதாகும். பறவைகளிலேயே நீண்ட கழுத்தும், நீண்ட கால்களையும் உடையது.

நிலத்தில் ஓடும் பறவைகளிலேயே மிக வேகமாக மணிக்கு 70 கி.மீ. வேகத்தில் ஓடக்கூடியது. பறவைகளிலேயே மிகப்பெரிய பறவையான

இது, உலகிலேயே மிகப்பெரிய முட்டை இடக்கூடியதாகும். உலகத்திலிருந்து அழிந்து போன மடகாஸ்கரில் வாழ்ந்த யானைப் பறவை, நியூசிலாந்தில் வாழ்ந்த பெரிய மோவா ஆகிய பறவைகள்தான் நெருப்புக் கோழி முட்டைகளைவிட பெரிய முட்டைகள் இடுபவையாக இருந்தன.

சிறப்பான பராமரிப்பு, பாதுகாப்பு, சுற்றுச்சூழல் வளமைப்படுத்தும் பணிகள் மூலம் உருவாக்கப்பட்ட இயற்கையையொத்த சூழல் போன்ற காரணங்களால் வண்டலூர் பூங்காவில் நெருப்புக் கோழிகள், முட்டையிட்டு அடைகாத்து இயற்கையாகக் குஞ்சு பொரிப்பது சாத்தியமாகிறது. சில சமயங்களில் வெளிப்புற ஆபத்து வரும்பொழுது குஞ்சுகளைப் பாதுகாக்க தாய், தந்தை பறவைகள் அங்குமிங்கும் ஓடும்போது குஞ்சுகள் மிதிபட்டு இறந்துவிடுகின்றன.

இதுபோன்ற நேர்வுகளில் குஞ்சுகள் உடனடியாகப் பிரிக்கப்பட்டு கைவளர்ப்பு மூலம் அவை வளர்க்கப்படுகின்றன. இதுவரை 11 நெருப்புக் கோழிகள் வெற்றிகரமாகக் கைவளர்ப்பு மூலம் வளர்க்கப்பட்டுள்ளன என்று பூங்கா நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**பயிர்க் கடனுக்கான வட்டி தள்ளுபடி: சித்தராமையா**

கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க் கடன்களுக்கான வட்டி தள்ளுபடி செய்யப்படும் என்று, கர்நாடக முதல்வர் சித்தராமையா தெரிவித்தார்.

ஹாவேரி மாவட்டம், ராணேபென்னூர் வட்டம், கதகூர் கிராமத்தில் சனிக்கிழமை நடைபெற்ற காங்கிரஸ் மகளிர், விவசாயிகள் மாநாட்டில் அவர் பேசியது:

எனது (சித்தராமையா) தலைமையிலான காங்கிரஸ் அரசு விவசாயிகளின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டுள்ளது. வறட்சி, பயிர்நாசம், கடன் தொல்லை போன்ற காரணங்களால் கர்நாடகத்தில் விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டது வேதனை அளிக்கிறது.

விவசாயிகள் மீது அக்கறை கொண்ட காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, கர்நாடகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு விவசாயிகளைச் சந்தித்து குறைகளைக் கேட்டறிந்து வருகிறார்.

அதனடிப்படையில், கர்நாடகத்தில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றிருக்கும் பயிர்க் கடன்கள் மீதான வட்டி, மேல்வட்டி, வாராக் கடன் மீதான வட்டி ஆகிய அனைத்தும் தள்ளுபடி செய்யப்படுகிறது.

தற்கொலை செய்து கொண்ட விவசாயிகள் குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகை ரூ.2 லட்சத்தில் இருந்து ரூ.5 லட்சமாக உயர்த்தி வழங்கப்படுகிறது. பண்ணை, சதுப்பு நிலங்களில் பணியாற்றி தற்கொலை செய்துகொண்ட விவசாயத் தொழிலாளர்களின் குடும்பங்களுக்கும் ரூ.5 லட்சம் இழப்பீடு வழங்கப்படும்.

தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் குழந்தைகளுக்கு முதுநிலைப் பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்கப்படும். தற்கொலை செய்து கொண்ட விவசாயிகளின் மனைவிகளுக்கு வழங்கப்பட்டு வந்த மாத உதவித்தொகை ரூ.500-இல் இருந்து ரூ.2 ஆயிரமாக உயர்த்தப்படுகிறது.

கூட்டுறவு வங்கிகளில் விவசாயிகள் பெற்றுள்ள கடன் தொகையில் 50 சதத்தை மத்திய அரசு தள்ளுபடி செய்தால், மீதமுள்ள 50 சத கடன் தொகையை தள்ளுபடி செய்ய மாநில அரசும் தயாராக உள்ளது.

வறட்சியால் மாநிலத்தில் ரூ.16 ஆயிரம் கோடி மதிப்பிலான பயிர்கள் நாசமடைந்துள்ளன. விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க நிவாரண உதவி செய்யும்படி கேட்டுக் கொண்ட போதும், அதை மத்திய அரசு கண்டு கொள்ளவில்லை. விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்க மாநில அரசு அனுப்பிய கோரிக்கைக்கு மத்திய அரசு பதில் அளிக்கவில்லை என்றார்.

நிகழ்ச்சியில் காங்கிரஸ் துணைத் தலைவர் ராகுல் காந்தி, கட்சியின் மேலிடப் பொறுப்பாளர் திக்விஜய் சிங், மாநிலத் தலைவர் ஜி.பரமேஸ்வர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**தொடர்ந்து உயர்ந்து வரும் துவரை, உளுத்தம் பருப்பு விலை**

தொடர்ந்து உயர்ந்து வரும் பருப்பு விலைகளை கட்டுப்படுத்த தடுப்பு நடவடிக்கைகளை விரைவுபடுத்த வேண்டும் என்று சமூக ஆர்வலர்களும், பொதுமக்களும் வலியுறுத்துகின்றனர்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பருப்பு வகைகளின் விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. ஏழைமக்கள் அதிகம் பயன்படுத்தும் துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு ஆகியவை மாதம்தோறும் ரூ.10 முதல் ரூ.20 வரை தொடர்ந்து விலையேறி வருகின்றன.

கடந்த மூன்று மாதங்களுக்கு முன் ரூ.110-ஆக இருந்த துவரம்பருப்பின் விலை தற்போது முதல் ரகம் ரூ.178-ஆகவும், 2-ம் ரகம் ரூ.168-ஆகவும் உள்ளது. இதேபோல் உளுத்தம் பருப்பும் உயர்ந்து தற்போது ரூ.178 ஆக உள்ளது.

தமிழர்களின் உணவுப் வகைகளில் இந்த இரு பருப்பு வகைகளும் முக்கிய இடத்தை பெறுகின்றன. சாம்பார், இட்லி, தோசை போன்ற உணவு வகைகளுக்கு இந்த பருப்பு வகைகள் அவசியம்.

இந்த விலையேற்றம் காரணமாக ஏழை, நடுத்தர மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் தீபாவளி போன்ற பண்டிகைகள் நெருங்கி வரும் நிலையில் இவற்றின் விலை இன்னும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதாக வியாபாரிகள் கூறுகின்றனர்.

இந்த விலை உயர்வை கட்டுப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பருப்பு வகைகளை பதுக்குபவர்கள் மீது நடவடிக்கை

துரிதப்படுத்த வேண்டும். தமிழக விவசாயிகள் பருப்பு வகைகளை பயிர் செய்ய ஊக்கப்படுத்த வேண்டும். விலை குறைவான நாடுகளில் இருந்து பருப்பு வகைகளை இறக்குமதி செய்ய மத்திய அரசை வலியுறுத்த வேண்டும் என்கின்றனர்.

இது குறித்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலர் ஏ.வி.சரவணனிடம் கேட்டபோது பருப்பு வகைகளின் விலை உயர்வுக்கு யூக வணிகம் எனப்படும் ஆன்-லைன் வர்த்தகம் முக்கிய காரணம். இதன் காரணமாக பல ஆயிரம் டன் பருப்புகள் பதுக்கப்படுகின்றன. விவசாயிகள் விளைவிக்கும் துவரைக்கு அதிக விலை கிடைக்கவில்லை. ஆனால் அது பருப்பாக மாறி வரும்போது அதன் விலை உயர்கிறது. இந்த விலை உயர்வு செயற்கையாக உண்டாக்கப்படுகிறது.

காய்கறி போன்றவற்றை பதுக்கி வைக்க முடியாது. ஆனால் பருப்பு வகைகளை பதுக்கி வைக்க முடியும். இதனை பருப்பு வகைகள் யூக வணிகத்தின் மூலம் பதுக்கி வைக்கப்ப்படுதை தடுக்க வேண்டும். ஆன்-லைன் வர்த்தகத்தை தடை செய்ய வேண்டும். மத்திய அரசின் தவறான கொள்கைதான் பருப்பு விலை உயர்வுக்கு முக்கிய காரணம்.

தமிழக அரசு உடனடி நடவடிக்கையாக மக்களுக்கு தேவையான அளவு நியாய விலைக் கடைகளில் நியாயமான விலையில் பருப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார்.

மேலும் இது குறித்து பொதுமக்களிடம் கேட்டபோது மாதம் தோறும் ரூ.30 விலையில் ஒரு குடும்பத்துக்கு ஒரு கிலோ துவரம் பருப்பு, ஒரு கிலோ உளுந்தம் பருப்பு நியாய விலைக் கடைகளில் வழங்கப்படுகிறது. அது போதுமானதல்ல. மேலும் தரமான கூடுதல் அளவு பருப்பு வகைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த அளவுக்கு விலை குறைக்க மானியம் வழங்க முடியாவிட்டாலும், விலை உயர்வை கட்டுப்படுத்தும் வகையில் நியாயமான விலைக்கு பொது விநியோகத் திட்டத்தின் மூலம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## வேளாண் ஆலோசனை மற்றும் வணிக மையம் அமைக்க அழைப்பு

வேளாண் ஆலோசனை மற்றும் வணிக மையம் அமைக்க வேளாண் பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதுகுறித்து கடலூர் வேளாண் இணை இயக்குநர் த.தனசேகரன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

விவசாயிகளுக்கு நவீன தொழில்நுட்பங்கள் உடனுக்குடன் கிடைத்திட வழிசெய்யும் வகையில், மத்திய அரசின் வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சகம் வேளாண் ஆலோசனை மற்றும் வணிக மையங்களை செயல்படுத்தி வருகிறது. இந்த மையங்கள் வேளாண் பட்டதாரிகளைக் கொண்டு நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ளது.

இந்த மையங்களை மேலும் நிறுவிட ஹைதராபாத் தேசிய வேளாண் விரிவாக்க மேலாண் நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய பயிற்சி மையங்களில் பயின்று சான்று பெற்ற வேளாண் பட்டதாரிகளிடமிருந்து கருத்துரு வரவேற்கப்படுகிறது. தகுதியானவர்கள் திட்டக் கருத்துருவினை தயாரித்து உடனடியாக அருகிலுள்ள தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகளில் சமர்ப்பித்து, வங்கிக் கடன் பெற்று தொழில் தொடங்கலாம். இதற்கு தேசிய விவசாய மற்றும் ஊரக மேம்பாட்டு வங்கி (நபார்டு) மூலம் மானியம் வழங்கப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு கடலூர் வேளாண் இணை இயக்குநர் அலுவலகம் அல்லது கடலூர் நபார்டு உதவிப் பொது மேலாளர் அலுவலகத்தைத் தொடர்பு கொள்ளலாம் என்று அந்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வெங்காயம்,தக்காளி விலை திடீர் உயர்வு: ஆப்பிள் வரத்து அதிகரிப்பு

மழை காரணமாக சின்னவெங்காயம் மற்றும் தக்காளி விலை திடீரென அதிகரித்துள்ளது. அதே சமயம் வரத்து அதிகரிப்பால் ஆப்பிள் பழம் விலை குறைந்துள்ளது.

மாட்டுத்தாவணி காய்கறிச் சந்தையில் ஞாயிற்றுக்கிழமை ஒரு கிலோ தக்காளி ரூ.30 ஆகவும் சிறிய வெங்காயம் விலை ரூ.40 ஆகவும் இருந்தது. இதில் இருந்து சில்லறை விற்பனை விலை கிலோவுக்கு ரூ.5 முதல் ரூ.10 வரை கூடுதலாக இருக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. சிறிய வெங்காயமும் தக்காளியும் போதிய அளவு வரத்து இல்லை. மழை காரணமாக இவற்றின் உற்பத்தி பாதித்துள்ளது. இன்னும் மழை நீடித்தால் விலை மேலும் அதிகரிக்கும். அதே சமயம் பெரிய வெங்காயம் எகிப்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டு இருப்பதால் அதன்விலை கிலோ ரூ.40ஆக குறைந்துள்ளது என காய்கறிகள் மொத்தவியாபாரி ஜி.தியாகராஜன் தெரிவித்தார். அதே சமயம் உள்ளூரில் சிறிய வெங்காயம் விளைச்சல் இல்லை. தற்போது இருப்புவெங்காயம் மட்டுமே வந்து கொண்டிருக்கிறது. இருப்பு தீர்ந்து விட்டால் இன்னும் விலை கூடிவிடும்.

விளைச்சலானபிறகு புதிய வெங்காயம் வருவதற்கு இன்னும் 50 நாள்கள் ஆகக்கூடும். சிறிய வெங்காயம் கிலோ ரூ.25 முதல் ரூ.45ஆகவும் பெரியவெங்காயம் கிலோ ரூ.20முதல் ரூ.40ஆகவும் உள்ளது என வெங்காயம் மொத்த வியாபாரி முத்துமுருகன் தெரிவித்தார்.

ஆப்பிள் பழம் வரத்து: காஷ்மீரில் உற்பத்தியாகும் ராயல் மற்றும் சிம்லா ஆப்பிள்களின் வரத்து அதிகரித்துள்ளதால் ஆப்பிள் விலை குறைந்துள்ளது. இதில் ராயல் ஆப்பிள் விலை கிலோவுக்கு ரூ.70 முதல் ரூ.120 வரையிலும் காஷ்மீர் ஆப்பிள் விலை ரூ.130ஆகவும் இருந்தது. வெளிநாட்டு ஆப்பிள் ரகங்கள் கிலோவுக்கு ரூ.170முதல் ரூ.220 வரையில் உள்ளது. காஷ்மீர் ஆப்பிள் வரத்து அக்டோபர், நவம்பர் மாதம் வரையில் இருக்கும். மாதுளையில் காபூல் மாதுளை ரூ.160, சாதா ரக மாதுளை ரூ.120ஆகவும் இருந்து என சிம்மக்கல் பழ மொத்த வியாபாரியான எம்.மணி தெரிவித்தார்.

## கொடைக்கானலுக்கு சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

கொடைக்கானலில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்திருந்தாலும், தொடர் மழை காரணமாக சுற்றுலா இடங்களைப் பார்க்க முடியாமல் அவர்கள் ஏமாற்றம் அடைந்தனர்.

கொடைக்கானலில் கடந்த 3 நாள்களாக பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. ஆனாலும் கடந்த 2 நாள்களாக பயணிகளின் வருகையும் அதிகரித்திருந்தது. ஆனால் அவர்களால் சுற்றுலா இடங்களைப் பார்க்க முடிய வில்லை. ஞாயிற்றுக்கிழமை மாலை மழை நின்ற பின் பிரையண்ட் பூங்கா, கோக்கர்ஸ்வாக் ஆகியப் பகுதிகளில் பயணிகள் காணப்பட்டனர். படகு சவாரி, சைக்கிள் சவாரி, குதிரை சவாரி செய்து அவர்கள் மகிழ்ந்தனர். தற்போது குளுமையான சீதோஷன நிலை காணப்படுகிறது.

## கொடைக்கானலில் தொடர் மழை: நீரோடைகளில் நீர்வரத்து அதிகரிப்பு

கொடைக்கானலில் தொடர்ந்து பெய்து வரும் மழையால், நீரோடைகளில் நீர்வரத்து ஏற்பட்டுள்ளது. இதனால், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்துள்ளது.

கொடைக்கானலில் கடந்த ஒரு வாரமாக பரவலாக மழை பெய்தது. அதன்பின்னர், 2 நாள்கள் மட்டும் மழையில்லை. தற்போது, மீண்டும் மழை பெய்துவருகிறது. சனிக்கிழமை தொடர்ந்து 4 மணி நேரம் பலத்த மழை பெய்தது.

இரண்டு நாள்களாக பெய்துவரும் மழையால், கொடைக்கானல் பகுதிகளிலுள்ள வெள்ளி நீர்வீழ்ச்சி, வட்டக்கானல் அருவி, பாம்பார் அருவி, பியர்சோழா அருவி மற்றும் வடகரைப்பாறை, வாழைகிரி உள்ளிட்ட மலைச்சாலைகளில் செல்லும் நீரோடைகளிலும் அதிக அளவு நீர்வரத்து ஏற்பட்டுள்ளது.

இந்த மழையால், கொடைக்கானல் மலையில் ஆங்காங்கே புதிய நீர்வீழ்ச்சிகள் தோன்றியுள்ளன. இவற்றைப் பார்ப்பதற்கு அழகாக

இருந்தாலும், இதனால் மலைச் சாலைகளில் பல இடங்களில் லேசான மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. இருப்பினும், போக்குவரத்துக்கு எந்தவித பாதிப்பும் இல்லை.

தொடர் மழை காரணமாக, சுற்றுலாப் பயணிகள் முக்கிய சுற்றுலா இடங்களை காணமுடியாமல் உள்ளனர். இதனால், சுற்றுலா இடங்களும் வெறிச்சோடிக் காணப்பட்டன. மேலும், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையும் பாதிப்பு அடைந்தது. இருப்பினும், இப்பகுதியில் இனி தண்ணீர் பிரச்னை இருக்காது என பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## முள்செடிகளின் ஆக்கிரமிப்பில் கோல்வார்பட்டி அணை: விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக புகார்

சாத்தூர் அருகே கோல்வார்பட்டி அணையில் கருவேல மரங்கள் அடந்துள்ளதால், 4500 ஏக்கர் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

சாத்தூர் அருகே அர்ஜுனா நதியின் குறுக்கே 1990-ஆம் ஆண்டில் ரூ.6 கோடி மதிப்பீட்டில் கோல்வார்பட்டி அணை கட்டப்பட்டது. சுமார் 4500 ஏக்கர் விளை நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில், 200 மீட்டர் நீலத்தில் கட்டப்பட்டுள்ள இந்த அணையில் மழைக் காலங்களில் 7.5 மீட்டர் உயரத்துக்கு தண்ணீர் தேக்க முடியும். தண்ணீர் திறந்து விடுவதற்காக அணையின் 13 ஷட்டர்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பல ஆண்டுகளாக போதிய பராமரிப்பு இல்லாததால் அணை சேதமடைந்துள்ளது. கரைப்பகுதியில் முள்செடிகள் வளர்ந்தும்ஸ 200 மீட்டர் நீளமுள்ள தடுப்புத் சுவர் முற்றிலும் சேதமடைந்தும், கரையோரப்

பகுதியில் மின் விளக்குகள் இல்லாமலும் உள்ளது. இதனால் சமூக விரோதிகளின் புகலிடமாக அணை மாறிவிட்டது.

**ஊழியர்கள் மாற்றம்:**

கோல்வார்பட்டி அணை பராமரிப்பு பணியில் 5 பணியாளர்கள் இருந்துள்ளனர். தற்போது அவர்கள் வெவ்வேறு அணைகளின் பாரமரிப்பு பணிகளுக்கு மாற்றப்பட்டு இங்கு ஒரே ஒரு பணியாளர் மட்டுமே இருப்பதாகவும் கூறப்படுகிறது.

அணையின் உள் பகுதியிலும், கரையோரப் பகுதிலும் முள் செடிகள் அதிகமாக வளர்ந்துள்ளன. இந்த முள் செடிகளை அகற்றவும், அணையைப் பராமரிக்கவும் பணியாளர்களை நியமிக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து விவசாயி வரதராஜ் கூறுகையில், அணையை பராமரிக்கக் கோரி விவசாய சங்கம் சார்பில், மாவட்ட நிர்வாகத்திடமும், பொதுப்பணித்துறை அதிகாரிகளிடமும் பலமுறை மனுகொடுத்தும் எவ்வித நடவடிக்கையும் இல்லை. இதனால் விவசாயம் அழிந்து வருகிறது என்றார்.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், அணையில் சேதமடைந்த ஷட்டர்கள் அனைத்தும் சீரமைக்கபட்டுள்ளன. முள் செடிகள் அகற்றுதல் உள்ளிட்ட பராமரிப்புப் பணிகள் அனைத்தும் விரைவில் மேற்கொள்ளப்படும் என்றனர்.

**தென்னை சாகுபடிக்கு நிதி பெற்றுத் தர கோரிக்கை**

வறட்சியால் பாதிக்கப்பட்ட தென்னை சாகுபடிக்கு, தென்னை வளர்ச்சி வாரிய நிதியைப் பெற்றுத் தர தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என உடுமலை வட்டார விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திருப்பூர் மாவட்டத்தில் பல்லடம், பொங்கலூர், உடுமலை, தாராபுரம் பகுதியில் அதிகளவில் தென்னை சாகுபடி செய்யப்படுகிறது.

2011-லிருந்து தென்மேற்கு, வடகிழக்குப் பருவமழை பெய்யாததால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து தென்னை சாகுபடி பாதிக்கப்பட்டது. நடப்பாண்டில் பெய்த மழையை அடிப்படையாகக் கொண்டு தென்னை சாகுபடியை சீரமைக்க விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர்.

இதற்காக, மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியம் நிதி ஒதுக்குகிறது. ஒரு மரத்துக்கு ரூ. 1,700 வீதம் ரூ. 300 கோடிக்கும் மேலான நிதியை கேரள மாநில தென்னை விவசாயிகள் பெற்று வருகின்றனர். ஆனால், தமிழக விவசாயிகளிடம் இத்திட்டம் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாததால் வாரிய நிதி கிடைப்பதில்லை.

இதுகுறித்து தென்னை விவசாயி வாவிபாளையம் சோமசுந்தரம் கூறியதாவது:

தொழிலாளர் பற்றாக்குறை, நிலத்தடி நீர்மட்டம் குறைவு போன்ற காரணங்களால் தென்னை சாகுபடியில் இருந்து மாற்று சாகுபடிக்குச் செல்ல முடியவில்லை. வறட்சியால் பாதிக்கப்பட்ட மரங்களுக்கு மாற்றாக புதிதாக தென்னங் கன்றுகளை நடவு செய்தல், சொட்டு நீர் பாசனம் அமைத்தல், தென்னை பராமரிப்பு ஆகியவற்றுக்கு மத்திய அரசின் தென்னை வளர்ச்சி வாரியம் வழங்கும் சீரமைப்பு நிதியை தமிழக அரசு விவசாயிகளுக்கு பெற்றுத் தர வேண்டும் என்றார்.

## வன உயிரின வார விழா

வன உயிரின வார விழா உதகையில் வெள்ளிக்கிழமை துவங்கியது.

அண்ணா உள்ளரங்கில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், முதுமலை புலிகள் காப்பக கள இயக்குநர் ஸ்ரீனிவாச ரெட்டி, ஆவின் தலைவர் அ.மில்லர்,

குன்னூர் சட்டப்பேரவை உறுப்பினர் கா.ராமச்சந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். வன உயிரின வாரவிழாவையொட்டி, நடைபெற்ற பேச்சு, கட்டுரைப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் பரிசுகளை வழங்கினார். இதில், மாவட்ட வன அலுவலர் பத்ரசாமி, மாவட்ட ஊராட்சித் தலைவர் மேனகா, உதகை ஊராட்சி ஒன்றியத் தலைவர் சாந்தி, யானை ஆராய்ச்சியாளர் டாக்டர் ராமகிருஷ்ணன், இயற்கை மற்றும் வன உயிரினப் பாதுகாப்பு அறக்கட்டளைத் தலைவர் சாதிக் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**உதகையில் பலத்த மழை**

உதகை மற்றும் சுற்றுப்பகுதிகளில் சனிக்கிழமை சுமார் 5 மணி நேரம் தொடர்ந்து பலத்த மழை பெய்தது.

சனிக்கிழமை பகல் 12 மணிக்கு தொடங்கிய மழை மாலை 5 மணி வரை நீடித்தது. இதனால் நகரின் தாழ்வான பகுதிகளிலும், சாலைகளிலும் மழை நீர் தேங்கி பொதுமக்கள் அவதிக்குள்ளாகினர்.

நகரின் பல்வேறு இடங்களிலும் பல முறை மின்சாரம் துண்டிக்கப்பட்டது. தொடர் மழை காரணமாக சனிக்கிழமை இரவு உதகையில் குளிரான காலநிலை நிலவியது.

**மழைநீரை சேமிக்க ஊராட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தல்**

தற்போது பெய்து வரும் மழைநீரை வீணாக்காமல் தனியார் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க வேண்டும் என்று ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு அண்மையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஊராட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)டி.கே.லட்சுமிநரசிம்மன் தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) எஸ்.குமார் முன்னிலை வகித்தார். 45 கிராம ஊராட்சிகளிலும் டெங்கு உள்ளிட்ட கொடிய நோய்கள் வராமல் தடுக்க வேண்டும். தற்போது ஆங்காங்கே மழை பெய்து வருவதால் மழை நீரை வீணாக்காமல் தனியார் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க வேண்டும். மரக்கன்றுகளை நட வேண்டும். அனைத்து வீடுகளிலும் கழிப்பறை கட்டும் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும். ஊராட்சிகளிலும் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஊராட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் வேளாண் அலுவலர் சுந்தரம், மின்வாரிய இளநிலைப் பொறியாளர் விஜியகுமார், ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பழனி, வட்டார மருத்துவ ஆய்வாளர் அன்பரசு, ஒன்றியப் பொறியாளர் ராஜேந்திரன், பணி பார்வையாளர்கள் ஆறுமுகம், தங்கவேல், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சியின் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

**மழைநீரை சேமிக்க ஊராட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தல்**

தற்போது பெய்து வரும் மழைநீரை வீணாக்காமல் தனியார் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க வேண்டும் என்று ஊராட்சி மன்ற தலைவர்களுக்கு அண்மையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெறும் வளர்ச்சிப் பணிகள் குறித்து ஊராட்சித் தலைவர்களின் ஆய்வுக் கூட்டம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)டி.கே.லட்சுமிநரசிம்மன் தலைமை வகித்தார். வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) எஸ்.குமார் முன்னிலை வகித்தார். 45 கிராம ஊராட்சிகளிலும் டெங்கு உள்ளிட்ட கொடிய நோய்கள் வராமல் தடுக்க வேண்டும். தற்போது ஆங்காங்கே மழை பெய்து வருவதால் மழை நீரை வீணாக்காமல் தனியார் நிலங்களில் பண்ணைக் குட்டைகள் அமைக்க வேண்டும். மரக்கன்றுகளை நட வேண்டும். அனைத்து வீடுகளிலும் கழிப்பறை கட்டும் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும். ஊராட்சிகளிலும் நடைபெற்று வரும் திட்டப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என ஊராட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

கூட்டத்தில் வேளாண் அலுவலர் சுந்தரம், மின்வாரிய இளநிலைப் பொறியாளர் விஜியகுமார், ஆண்கள் அரசு மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் பழனி, வட்டார மருத்துவ ஆய்வாளர் அன்பரசு, ஒன்றியப் பொறியாளர் ராஜேந்திரன், பணி பார்வையாளர்கள் ஆறுமுகம், தங்கவேல், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சியின் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## கோழிகளுக்கு குடல் புண் நோய் ஏற்பட வாய்ப்பு: தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தல்

கோழிகளுக்கு குடல் புண் நோய் ஏற்பட வாய்ப்புள்ளதால் பண்ணைகளில் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: அடுத்த 4 நாள்களுக்கு பொதுவாக

மேகமூட்டமும் மழையும் கூடிய வானிலை நிலவும் என்பதால் வெப்பநிலை குறைந்த அளவுகளில் நிலவும். கோழிகளில் தீவன எடுப்பு உயர்ந்து காணப்படும். முட்டை உற்பத்தி இயல்பாக இருக்கும்.

புதிய வரவு சோயா பிண்ணாக்கில் அதிக அளவு ஈரப்பதம் கண்டறியப்படுகிறது. எனவே அதன் கொள்முதல் தரத்திலும் பயன்பாடு மற்றும் சேமிப்பு முறையிலும் மிகுந்த கவனம் தேவை. மேலும் விலையேற்றம் காரணமாக தரம் குறைந்த சோயா பிண்ணாக்கு வரவுக்கும் வாய்ப்பு உள்ளதால் அவற்றைக் கொள்முதல் செய்யும்போது கவனம் வேண்டும்.

கடந்த வாரம் கோழியின கண்காணிப்பு மற்றும் கட்டுப்பாட்டு ஆய்வகத்தில் ஆய்வு செய்யப்பட்ட இறந்த கோழிகள் பெரும்பாலும், ஈகோலை கிருமி மற்றும் சளி பாதிப்புக்கு உள்ளாகி இருப்பது தெரியவந்து உள்ளது.

இதனைக் குறைக்க பண்ணையாளர்கள் கோழிகளுக்கு அளிக்கப்படும் தீவனம் மற்றும் குடிநீரில் ஈகோலை கிருமியின் தாக்கம் உள்ளதா எனப் பரிசோதனை செய்து அதற்கு தகுந்தாற்போல் கிருமி நாசினிகளை உபயோகிக்க வேண்டும்.

பருவமழை பெய்து வருவதால் கோழிப்பண்ணைகளில் ஏற்படும் ரத்தக் கழிச்சல் மற்றும் குடல் புண் நோய்களுக்கு எதிரான தடுப்பு முறைகளையும் கடைப்பிடிக்க வேண்டும்.

### எண்ணேக்கோல் அணையிலிருந்து கால்வாய் அமைக்கும் திட்டம்

கிருஷ்ணகிரி மாவட்டம், எண்ணேக்கோல் அணையிலிருந்து வலது, இடதுபுறக் கால்வாய்கள் அமைக்கும் திட்டம் தொடர்பாக உயர் கல்வித் துறை அமைச்சர் பி.பழனியப்பன் ஞாயிற்றுக்கிழமை நேரில் ஆய்வு செய்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம், எண்ணேக்கோல் அணைக்கட்டிலிருந்து வலது, இடதுபுறக் கால்வாய்கள் அமைக்கத் திட்ட மதிப்பீடு தயாரிக்க ரூ.40 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதாக தமிழக முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.

இதையடுத்து, கால்வாய் அமைக்கும் பணிக்கானத் திட்ட மதிப்பீடு குறித்து அமைச்சர் பி.பழனியப்பன் நேரில் ஆய்வு செய்தார்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ், பாலக்கோடு சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.அன்பழகன், பொதுப் பணித் துறை செயற்பொறியாளர் (திட்டம், வடிகால் அமைப்பு- சேலம்) ரவீந்திரபாபு, உதவி செயற்பொறியாளர்கள் சாம்ராஜ், கௌரி, அஸ்லாம் பாஷா, முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் வி.கோவிந்தராஜ் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## பெண்களுக்கு தொன்னை தயாரிப்புப் பயிற்சி

அரியலூர் அருகே ரெட்டிப்பாளையத்தில் பெண்களுக்கு தொன்னை தயாரிப்பு பயிற்சி வெள்ளிக்கிழமை அளிக்கப்பட்டது.

அரியலூர் மாவட்டம், ரெட்டிப்பாளையம் வி.கைகாட்டியில் உள்ள அல்ட்ராடெக் சிமென்ட் ஆலை, நிறுவனத்தைச் சுற்றியுள்ள கிராம மக்களின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு பல்வேறு தொழிற்பயிற்சிகளை வழங்கி வருகிறது.

இதேபோல், அல்ட்ராடெக் சிமென்ட் தொழிற்சாலையின் தொழிலாளர்கள் குடியிருப்பு வளாகத்தில் உள்ள ஆதித்யா வணிக வளாகத்தில் தொன்னை தயாரிப்பு பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியை ஆலையின் தலைவர் வெ. கணேசன் தொடங்கி வைத்து பேசுகையில், சுற்றுப்புற கிராமங்களில் உள்ள பெண்கள்

முன்னேற்றத்துக்காக இதுபோன்ற தொழிற்பயிற்சிகளை தொடர்ந்து வழங்கி வருகிறோம். இந்த பயிற்சியில் பொதுமக்கள் அதிக அளவில் பங்கேற்று தங்களது பொருளாதாரத்தை பெருக்கி கொள்ளலாம். இந்த பயிற்சியில் பங்கு பெற்றுள்ள பெண்களால் உற்பத்தி செய்யப்படும் தொன்னைகளை ஆதித்யா குடியிருப்பில் உள்ள கோயில்களுக்கு விலை கொடுத்து வாங்கிக் கொள்ள தயாராக உள்ளோம் என்றார்.

நிகழ்ச்சியில் ஆலையின் பல்வேறு துறைகளின் மூத்த தலைவர்கள் டி.பி. ஜனார்த்தனன், என். சீனிவாசராவ், சி.எம். சக்கரவர்த்தி, வி.சி. ஜோய், கண்ணன், ஹீராகுமார், முத்துகிருஷ்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை அல்ட்ராடெக் சிமென்ட் தொழிற்சாலையின் சமூக மேம்பாட்டுத் துறையினர் செய்திருந்தனர். இதில் 5 பேருக்கு செய்முறை பயிற்சி அளிக்கப்பட்டது.

## நிலமும் நீரும் நமக்கானது என்பதை உரத்துச் சொல்ல வேண்டும்: மேதா பட்கர்

நிலமும் நீரும் நமக்கானது என்பதை உரத்துச் சொல்ல வேண்டும் என வலியுறுத்தினார் சமூக சேவகி மேதா பட்கர்.

திருச்சியில் சனிக்கிழமை நடைபெற்ற தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாட்டில் அவர் மேலும் பேசியது:

இந்தியா விடுதலையடைந்து 60 ஆண்டுகள் கடந்தும் தலித் மக்களுக்கான வாழ்வாதாரம் முன்னேற்றமடையவில்லை. அளவற்ற வளங்களைக் கொண்ட தமிழ்நாட்டில் இன்னமும் தலித் மக்கள் கூலிகளாகத்தான் இருக்கிறார்கள். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

ஆயிரக்கணக்கான ஹெக்டேர் விளைநிலங்கள் கார்ப்பரேட் நிறுவனங்களுக்கும், அன்னிய முதலாளிகளுக்கும் கைமாறிக் கொண்டிருக்கிறது. நிலமும் தண்ணீரும் நமக்கானது என்பதை உரத்துச் சொல்ல வேண்டும். இதை மத்திய மாநில அரசுகளுக்குக் கேட்கும் வகையிலான இயக்கங்களை முன்னெடுக்க வேண்டும்.

வாக்கு வங்கியை மையமாகக் கொண்டு அதிகரித்து வரும் மதவாதமும், சாதியவாதமும் நம்மைப் பிரித்தாள வழிகொடுக்கக் கூடாது. சமூக, பொருளாதார மாற்றத்தை உருவாக்குவதற்காக அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து, சமத்துவத்துக்காகவும், நீதிக்காகவும் போராட வேண்டும் என்றார் மேதா பட்கர்.

மாநாட்டை வாழ்த்தி அதிமுக சார்பில், மாநில மின்துறை அமைச்சர் நத்தம் ஆர். விசுவநாதன் பேசும்போது, ஆதிதிராவிட மக்களின் முன்னேற்றத்துக்காக கடந்த ஆட்சியை விடவும் ஏறத்தாழ இரட்டிப்பு நிதியை ஒதுக்கீடு செய்து, வேறு திட்டங்களுக்கு அந்த நிதியை மாற்றாமல் செலவிட்டு பாடுபட்டு வருகிறார் முதல்வர் ஜெயலலிதா எனக் குறிப்பிட்டார். அரசுத் தலைமைக் கொறடா ஆர். மனோகரன் பங்கேற்றார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்:

தமிழக மக்களின் அடிப்படை வாழ்வாதாரமான வேளாண் நிலங்களைப் பாதுகாக்கும் வகையில் கடுமையான சட்டத்தை தமிழக அரசு உடனடியாக நிறைவேற்ற வேண்டும். நீர்நிலைகள் அனைத்தையும் முறையாக பராமரிக்கவும், நீர்நிலைகளில் செய்யப்பட்டுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றவும் கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும்.

நிலத்தடி நீரை உறிஞ்சும் சீமைக் கருவேல மரங்களை முழுமையாக அகற்றவும் அவற்றுக்கு மாற்றாக பயன்தரும் மரங்களை நட்டு பராமரித்து

காடுகளின் பரப்பை 33 சதவிகிதமாக மாற்றவும் முழுவீச்சில் பணிகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும்.

பாமர மக்களின் குடும்பத்தை சீரழிவுக்கு முக்கிய காரணமாக இருக்கும் மதுபானக் கடைகளை படிப்படியாக மூட வேண்டும். பள்ளி மாணவ, மாணவிகளுக்கு சுற்றுச்சூழல் கல்வியை அனுபவ ரீதியாக வழங்க வேண்டும்.

தமிழக மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் காவிரி டெல்டாவை சீரழிக்கும் மீத்தேன், செல் திட்டங்களை மத்திய அரசு கைவிட வேண்டும். கடற்கரைப் பகுதிகளில் வணிக நோக்கில் தொழிற்சாலைகள், விடுதிகள் தொங்குவதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

இமானுவேல் சேகரனுக்கு அரசு விழா நடத்த வேண்டும் என்பன உள்ளிட்ட 15 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அக்கட்சியின் நிறுவனர்- தலைவர் பெ. ஜான்பாண்டியன், பொதுச் செயலர் பிரிசில்லா பாண்டியன் ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

**ஏரி, வரத்து வாய்க்கால்களைத் தூர்வார கோரிக்கை**

பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள ஏரி, வரத்து வாய்க்கால் மற்றும் கண்மாய்களைத் தூர்வாரி மழைநீரைச் சேமிக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.

ஆற்றுப் பாசனமே இல்லாத பெரம்பலூர் மாவட்டத்தில் கிணற்றுப் பாசனத்தை நம்பியே விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். இருப்பினும் பருத்தி, மக்காசோளம் மற்றும் சின்ன வெங்காய சாகுபடியில் தமிழக அளவில் பெரம்பலூர் மாவட்டம் முன்னிலை வகித்து வருகிறது.

ஆண்டுதோறும் செப்டம்பர் வரை சராசரியாக 395 மில்லி மீட்டர் மழை பெய்யும். ஆனால், நிகழாண்டு செப்டம்பர் வரை 675.40 மில்லி மீட்டர்

மழை பெய்துள்ளது. மேலும், தற்போது மாவட்டம்தோறும் இரவு நேரங்களில் பரவலான மழை பெய்து வருகிறது.

இந்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தாலும், மழை நீரைச் சேமிக்க மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித் துறையினரும் உரிய நடவடிக்கை எடுக்காததால் ஏரிகள், குளம், கண்மாய்கள் அனைத்தும் வறண்டு காணப்படுகிறது. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள பெரும்பாலான ஏரி, வரத்து வாய்க்கால்கள் புதர்மண்டிக் கிடக்கின்றன. ஒருசில வாய்க்கால் குறுகியும் சில இடங்களில் வாய்க்கால்கள் இருந்ததற்கான அடையாளமே இல்லாத நிலையிலும் காணப்படுகிறது. கண்மாய்களில் பிளாஸ்டிக் கழிவுகள் மற்றும் வண்டல் மண் சேர்ந்து நீர்தேக்கும் அளவும் குறைந்து வருகிறது. இதனால் மழைக் காலங்களில் வரும் நீர் குறிப்பிட்ட அளவு மட்டுமே கண்மாயில் சேமிக்கும் நிலையில் உள்ளது. அதிகப்படியான மழைநீர் வெளியேறி விவசாயத்திற்கு பயன்படாத நிலை உருவாகிறது.

கன மழையால் ஓடைகளில் தண்ணீர் வரத்து இருந்தும், வாய்க்கால்களை சீரமைக்காததாலும், ஓடை, நீர் வரத்து வாய்க்கால்கள் ஆக்கிரமிப்பில் உள்ளதாலும் பல இடங்களில் கண்மாய்களில் தண்ணீர் தேக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கூறுகின்றனர்.

இதனால் ஆண்டுதோறும் பெய்யும் மழைநீரைத் தேக்கி வைக்க முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டு, உற்பத்தியும் குறைந்துவருகிறது. குளம், ஏரிக்கு வரும் வரத்து வாய்க்கால்களிலும் வளர்ந்துள்ள முள் முதர்களை சீரமைக்கக் கோரி விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் பலமுறை வலியுறுத்தியும், மாவட்ட நிர்வாகமும், பொதுப்பணித் துறையினரும் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே, இனி வரும் காலங்களில் விவசாயிகளின் நலன் கருதி கண்மாய் மற்றும் வாய்க்கால்களை தூர் வாரி, மழை நீரை சேகரித்து, நிலத்தடி நீர்

மட்டம் உயர மாவட்ட மற்றும் பொதுப்பணித்துறை நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## 22% ஈரப்பதமுள்ள குறுவை நெல்லை கொள்முதல் செய்ய வலியுறுத்தல்

22 சதவீதம் ஈரப்பதமுள்ள குறுவை நெல்லை அரசு உடனடியாக கொள்முதல் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதுகுறித்து சங்க திருவாரூர் மாவட்டச் செயலர் மாசிலாமணி வெளியிட்டுள்ள அறிக்கை:

திருவாரூர் மாவட்டத்தில் தற்போது குறுவை நெல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. 2-வது நெல்பருவம் தொடங்கும் அக். 1-ம் தேதி முதல் கொள்முதலில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கடந்த சில நாள்களாக ஆயிரக்கணக்கான நெல் மூட்டைகளை கொள்முதல் நிலையங்களில் விவசாயிகள் அடுக்கி வைத்துள்ளனர்.

அண்மையில் பெய்த மழையால் பல மையங்களில் நெல் மூட்டைகள் பாதித்து, நெல் மணிகள் முளைத்து மறுபடியும் காயவைத்து கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. பருவ மழையும், பனிப்பொழிவும் தொடங்க உள்ளதால் நெல் ஈர அளவு அதிகரிக்கும். எனவே, விவசாயிகளின் நலன் கருதி தமிழக அரசு 22% வரை ஈரப்பதத்தை அனுமதித்து நெல் கொள்முதல் செய்ய வேண்டும்.

தமிழக அரசு நெல் காயவைக்கும் உலர் இயந்திரங்கள் வாங்கி கொள்முதல் நிலையங்களுக்கு அனுப்ப வேண்டும். சிட்டா அடங்கல் விவசாயிகள் கொடுத்தால் மட்டுமே கொள்முதல் செய்யப்படும் என்ற புதிய உத்தரவை கைவிட வேண்டும். மேற்குறிப்பிட்டுள்ள கோரிக்கைகளை வலியுறுத்தி, அக். 13-ம் தேதி திருவாரூர் தமிழ்நாடு

நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகத்தில் தொடர் முற்றுகைப் போராட்டம் நடத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது என்று அவர் தெரிவித்துள்ளார்.

## 20இல் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அக். 20ஆம் தேதி விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறும் என ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

மாதம்தோறும் விவசாயிகள் கோரிக்கைகளை கேட்டு அதற்கு தீர்வு காணும் வகையில் சிறப்பு குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி, அக்டோபர் மாதத்துக்கான கூட்டம் வரும் 20ஆம் தேதி முற்பகல் 11 மணிக்கு, மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் நடைபெறுகிறது.

ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் விவசாயிகளிடமிருந்து செப்டம்பர் மாத கோரிக்கை தினத்தில் பெறப்பட்ட மனுக்களுக்கான பதில்கள் வழங்கப்படும். மேலும் விவசாயிகளின் வேளாண் பணிகள் தொடர்பான கோரிக்கைகளுக்கு மாவட்ட ஆட்சியரால் நேரில் பதில் அளிக்கப்படும்.

இதில், கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் தவறாமல் பங்கேற்க வேண்டும் என செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத்தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## வெள்ளரிக்காய் தோசை.. இட்லி



வெள்ளரி, படரும் கொடி வகையை சேர்ந்தது. இதன் தாயகம் இந்தியா. இங்கிருந்து உலக நாடுகளுக்கெல்லாம் படர்ந்திருக்கிறது. எல்லா நாட்டு மக்களும் உணவுகளில் சேர்க் கும் முக்கிய காய்கறியாக இது இருந்து கொண்டிருக்கிறது.

வெள்ளரிக்காயில் மூன்று வகை உண்டு. ஒன்று: மெல்லிய நீண்ட வகை, இதை தோலுடன் சாப்பிடலாம். இரண்டு: குட்டையான பருத்த வகை. மூன்று: பழத்திற்கானது. வெள்ளரியில் 90 சதவீதம் நீர் சத்துதான் இருக்கிறது. இது நாவறட்சியை போக்கும். பசியை உண்டாக்கும். உடலுக்கு குளிர்ச்சியை உண்டு பண்ணும். இதில் வைட்டமின் பி, சி,கே மற்றும் கால்சியம், சில்கன், பொட்டாசிய தாதுக்கள் நிறைந்துள்ளன.

வெள்ளரிக்காயின் சிறப்பு பற்றிய சித்த மருத்துவ பாடல்:

பிஞ்சு வெள்ளிரிக்காய்க்கு பேசு திரிதோடம்போம்

வஞ்சியரே! முற்றிய காய் வாதமுமாய் – நைஞ்சகனி
உண்டாற் சயித்தியமாம் உள்ளிருக்கும் அவ்விதையைக்
கண்டாலும் நிற்றிரங்கும் காண்..!

வெள்ளரி பிஞ்சுவை தோலுடன் சாப்பிட்டால் அதிக பலன் கிடைக்கும். வெள்ளரி விதையில் அதிக மருத்துவகுணம் இருக்கிறது. சிறுநீர் நோய்களுக்கு அது சிறந்த மருந்து. நீரடைப்பு மற்றும் கல்லடைப்புக்கு செய்யப்படும் மருந்துகளில் வெள்ளரி விதை சேர்க்கப்படுகிறது. உடல் வெப்பமடைந்தால் பித்தம் அதிகரிக்கும். வெள்ளரிக்காய் சாப்பிட்டால் பித்தத்தன்மை சீராகும்.

வெள்ளரிக்காய் வயிற்று எரிச்சல், நெஞ்செரிச்சல், உயர்ரத்த அழுத்தம், தூக்கமின்மை போன்றவைகளை நீக்கி உடலுக்கு குளிர்ச்சியளித்து பித்தத்தை குறைக் கும். இதில் நீர்சத்து நிறைந்திருப்பதால் சரும வறட்சியை குறைக்கும். மிருதுத்தன்மையளிக்கும். கரப்பான் போன்ற

சரும நோய்களைபோக்கும். கண்களை சுற்றி ஏற்படும் கரு வளையத்தை நீக்க வெள்ளரி துண்டுகளை வெட்டி, கண்களை மூடிக்கொண்டு அதன்மேல் வைக்கவேண்டும். பத்து நிமிடங்கள் வைத்தால் கண்கள் குளிர்ச்சியாகி, கருவளையம் நீங்கும். வெள்ளரி சாற்றை முகத்தில் தேய்த்தால் கருந்திட்டுகள், சூரிய புற ஊதா கதிர்களால் உண்டாகும் பாதிப்புகள் மறையும்.

உடல் எடையை குறைக்க விரும்புகிறவர்கள் வெள்ளரிக்காயை அதிகம் சாப்பிடலாம். இது சீறுநீரை அதிகப்படுத்தும். ரத்த அழுத்தத்தை குறைக்கும். சீறுநீரக கல் தொந்தரவு கொண்டவர்கள் வெள்ளரிக்காயை உணவில் அதிகம் சேர்க்கலாம். தினமும் வெள்ளரி பிஞ்சை நன்கு மென்று சாப்பிட்டால், வாய் நாற்றம் குறையும். வெள்ளரிக்காயில் உள்ள சிலிக்கா சத்து மூட்டுக் களை சுற்றியுள்ள இணைப்பு திசுக்களை பலப்படுத்தும். கோலாஜன் என்ற இணைப்பு திசுக்களை உருவாக்கும் புரதத்தை மேம் படுத்தும். கால்சியம் தாது எலும்புகளில் சீராக பரவ உதவும். இதன் மூலம் மூட்டுவலி குறையும்.வெள்ளரிக்காய் அதிகம் சாப்பிடுகிறவர் களுக்கு முடி நன்றாக வளரும். சிலருக்கு வெள்ளரிக்காய் எளிதாக ஜீரணம் ஆகாது. அவர்கள் மிளகுதூள், சீரக தூளை வெள்ளரிக்காயில் கலந்து சாப்பிடவேண்டும்.சர்க்கரை நோயாளிகள் வெள்ளரிக்காயை உணவுகளில் அதிகம் சேர்த்துக்கொள்ளலாம்.

**வெள்ளரிக்காயில் தயாராகும் சுவையான உணவுகள்:**

**<u>தோசை</u>**

பச்சரிசி – 250 கிராம் (3 மணிநேரம் தண்ணீரில் ஊறவையுங்கள்)

வெள்ளரிக்காய் – 250 கிராம்

தேங்காய் துருவல்–2 தேக்கரண்டி

பச்சை மிளகாய் – 3

சீரகம்–1 தேக்கரண்டி

கொத்தமல்லி தழை–1 கைப்பிடி

உப்பு–தேவைக்கு

நல்லெண்ணெய்–தேவைக்கு

**செய்முறை:**

1.வெள்ளரிக்காயை தோலுடன் சிறு துண்டுகளாக நறுக்குங்கள்.

2.தேங்காய் துருவல், மிளகாய், கொத்தமல்லி தழை ஆகியவற்றை அரைத்துக்கொள்ளுங்கள்.

3.வெள்ளரிக்காயை, ஊற வைத்த அரிசியுடன் சேர்த்து அரையுங்கள். தேவைக்கு சிறிதளவு நீர் சேர்த்துக்கொள்ளுங்கள்.

4.அரைத்த மாவை, ஏற்கனவே அரைத்து வைத்திருக்கும் பொருட்களுடன் சேர்த்து, கலந்து தேவைக்கு உப்பும் கலந்து தோசையாக வார்த்தெடுங்கள்.

இந்த மாவை அரைத்தவுடன் தோசையாக்கி விடலாம். புளிக்கவைக்க வேண் டியதில்லை. சுவையாக இருக்கும். சர்க்கரை நோயாளிகளுக்கும் ஏற்றது.

**<u>இனிப்பு தோசை</u>**

பச்சரிசி – 250 கிராம் (3 மணிநேரம் தண்ணீரில் ஊறவைக்கவும்)

வெள்ளரிக்காய் –250 கிராம் (துருவி வைத்துக் கொள்ளவும்)

வெல்லம்–100 கிராம் (தூளாக்கவும்)

தேங்காய் –அரை மூடி (துருவிக் கொள்ளவும்)

ஏலக்காய்–5

உப்பு–1 சிட்டிகை

நெய்–50 மி.லி.

**செய்முறை:**

1.வெள்ளரிக்காயை துருவி அதில் உள்ள நீரை பிழிந்து தனியாக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

2. பச்சரிசி, தேங்காய் துருவல், ஏலக் காய், வெல்லம் ஆகியவற்றில்

வெள்ளரிக்காய் நீர் கலந்து அரையுங்கள். தேவைப்பட்டால் மட்டும் சிறிதளவு நீர் சேருங்கள். தோசை மாவு பதத்திற்கு அரைக்கவேண்டும். உப்பும் கலந்துகொள்ள வேண்டும்.

3. அந்த மாவில் துருவி வைத்துள்ள வெள்ளரிக்காயை கலந்து நெய் சேர்த்து தோசைகளாக வார்த்துக் கொள்ளவும். இந்த தோசையை குழந்தைகள் விரும்பி சாப்பிடுவார்கள்.

**<u>இட்லி</u>**

வெள்ளரிக்காய் –250 கிராம்

இட்லிக்கான ரவை–250 கிராம்

தேங்காய் துருவல் –3 தேக்கரண்டி

புளித்த தயிர்– 3 தேக்கரண்டி

பச்சைமிளகாய்–4 (சிறிதாக நறுக்கிக் கொள்ளவும்)

உப்பு –தேவைக்கு

**செய்முறை:**

1. வெள்ளரிக்காயை துருவி, அத்துடன் இட்லி ரவையை கலந்து, தேங்காய் துருவல், தயிர், பச்சை மிளகாய் ஆகியவற்றை சேர்த்து, தேவைப்பட்டால் சிறிது நீர் ஊற்றி பத்து நிமிடம் வைத்திருங்கள்.

2. இட்லி தட்டில் மாவை ஊற்றி வேகவைத்து சுவையுங்கள்.

இது சத்தான இட்லி. சர்க்கரை நோயாளிகள் மற்றும் எடையை குறைக்க விரும்புகிறவர்களுக்கு ஏற்றது.

**<u>கொஜ்ஜு</u>**

வெள்ளரி பிஞ்சு –250 கிராம்

புளி –சுண்டைக்காய் அளவு

தேங்காய் துருவல்– 4 தேக்கரண்டி

பொட்டு கடலை– 3 தேக்கரண்டி

வெல்லத்தூள்–1 தேக்கரண்டி

பச்சைமிளகாய்–2

உப்பு– தேவைக்கு

**தாளிக்க:**

கடுகு– அரை தேக்கரண்டி

காய்ந்த மிளகாய்– 2

நல்லெண்ணெய்–1 தேக்கரண்டி

நறுக்கிய கொத்தமல்லி தழை –1 கைப்பிடி.

**செய்முறை:**

1. வெள்ளரி பிஞ்சுகளை நறுக்குங்கள்.

2. தேங்காய் துருவல், புளி, பொட்டுக்கடலை, வெல்லம் பச்சைமிளகாய், உப்பு ஆகியவற்றை சேர்த்து மிக்சியில் அரையுங்கள்.

3. கலவையில் நறுக்கிய வெள்ளரிபிஞ்சை கலந்து, தாளிக்கும் பொருட்களை தாளித்து சேர்த்திடுங்கள்.

4. கொத்தமல்லி தழை கலந்து பத்து நிமிடம் ஊறவைத்து சாப்பிடுங்கள்.

இது புளிப்பு, இனிப்பு, லேசான கசப்பு கலந்து காணப்படும். சூடான சாதம், சப்பாத்தியுடன் சாப்பிடலாம்.

**கோவை, திருப்பூர் விவசாயிகள் கோரிக்கையை ஏற்று திருமூர்த்தி அணை இன்று திறப்பு ஜெயலலிதா உத்தரவு**



சென்னை,

கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டவிவசாயிகளின் கோரிக்கையை ஏற்று திருமூர்த்தி அணை இன்று (திங்கட்கிழமை) திறக்கப்படுகிறது.

இதுகுறித்து முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

விவசாயிகள் கோரிக்கை

திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், பாலாறு பழைய ஆயக்கட்டு தளி வாய்க்கால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி தளி வாய்க்கால் வடபூதிநத்தம் பாசன விவசாயிகள் சங்கம் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நான்காம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி

திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக் குழு உள்ளிட்ட கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

திருமூர்த்தி அணை திறப்பு

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருமூர்த்தி அணையிலிருந்து, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் பாலாறு பழைய ஆயக்கட்டு தளி வாய்க்கால் பாசனத்திற்காகவும் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நான்காம் மண்டல பாசனத்திற்காகவும் இன்று (திங்கட்கிழமை) முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 96 ஆயிரத்து 854 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

## சொட்டுநீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் தகவல்



பொள்ளாச்சி

சொட்டுநீர் பாசனம் அமைக்க விவசாயிகளுக்கு 100 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது என்று தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) சகாப்தீன் தெரிவித்துள்ளார்.

<u>அட்மா திட்ட கூட்டம்</u>

பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை (அட்மா) கூட்டம் மீன்கரை ரோட்டில் உள்ள உழவர் மையத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு அட்மா திட்ட தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார். ஒன்றிய குழு தலைவர் செல்வி பத்மினி முன்னிலை வகித்தார்.

கூட்டத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் உமாராணி பேசும் போது கூறியதாவது:–

வேளாண்மை துறை மூலம் வழங்கும் மானியங்களில் இந்த ஆண்டு முதல் விவசாயிகளின் வங்கி கணக்கில் செலுத்தும் நடைமுறை பின்பற்றப்பட உள்ளன. இதேபோன்று டி.ஏ.பி. உரம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு

கடன் சங்கங்களில் பெறப்பட்ட ரசீது சமர்பித்து மானியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

விவசாயிகளுக்கு மானியம்

பசுந்தாள் பயிர்களான சணைப்பை, தக்கப்பூண்டு, கொளுஞ்சி போன்றவற்றை விதை உரிமம் பெற்ற கடைகளில் வாங்கி ரசீதுடன் விண்ணப்பிக்க வேண்டும். தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் பயறு வகை பயிர்களுக்கு டி.ஏ.பி. உரம் மற்றும் தெளிப்பு கூலிக்கு 50 சதவீத மானியம் வழங்கப்பட்டு வருகின்றன. ஒரு விவசாயிக்கு அதிகபட்சமாக 2 ஹெக்டேர் வரை மானியம் வழங்கப்படுகின்றன.

மண்ணில் அங்கக சத்தை அதிகரிக்க பசுந்தாள் உர பயிர்களுக்கு மானியம் வழங்கப்படுகிறது. ஒரு ஹெக்டேருக்கு 50 கிலோ விதை வீதம் 2 ஹெக்டேர் வரை வழங்கப்படுகின்றன. உரிமம் பெற்ற விதைக்கடைகளில் பெறப்பட்ட பில்லுடன் மானியத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். கருவி மூலம் நிலக்கடலை சாகுபடி செய்ய ஒரு ஹெக்டேருக்கு ரூ.2020 மதிப்பிற்கு நுண்ணூட்டம், ஜிப்சம், ரைசோபியம், பாஸ்போ பாக்டீரியா மானியமாக வழங்கப்படுகின்றன. வேளாண்மை விரிவாக்க மையத்தில் உள்ள முன்னுரிமை பதிவேட்டில் விவசாயிகள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இயற்கை விவசாயம்

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் (பொறுப்பு) சகாப்தீன் பேசும் போது கூறியதாவது:–

தேசிய தோட்டக்கலைத்துறை சார்பில் பவர் டில்லர் எந்திரம் வாங்க ரூ.40 ஆயிரம் மானியமாக வழங்கப்படுகிறது. தென்னை, வாழை, காய்கறி பயிர்கள், மரவள்ளி கிழங்கு சாகுபடிக்கு சொட்டுநீர் பாசனம் அமைக்க வடக்கு ஒன்றியத்திற்கு 30 ஹெக்டேர் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

இதற்கு சிறு, குறு விவசாயிகளுக்கு 100 சதவீத மானியமும், பெரிய விவசாயிகளுக்கு 75 சதவீத மானியமும் வழங்கப்படுகிறது. தொழு உரம், மண்புழு உரம், உயிர் உரங்களை பயன்படுத்தி இயற்கை விவசாயம் செய்யும் விவசாயிக்கு ஏக்கருக்கு ரூ.8 ஆயிரம் மானியம் வழங்கப்படுகிறது. தேவைப்படும் விவசாயிகள் முன்பதிவு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

<u>கோரிக்கை</u>

தொடர்ந்து விவசாயிகள் பேசும் போது, பொள்ளாச்சி–உடுமலை ரோட்டில் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வரும் வேளாண்மை பொறியியல் துறை அலுவலகத்தை மீன்கரை ரோட்டில் உள்ள உழவர் மையத்திற்கு மாற்ற வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

இதில் அட்மா திட்ட வட்டார தொழில்நுட்ப மேலாளர் சண்முக பிரியா, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் உமா ஷாலினி, நாகராஜ், பட்டு வளர்ச்சி துறை இளநிலை ஆய்வாளர் நெல்லை முருகன், வேளாண்மை பொறியியல் துறை இளநிலை பொறியாளர் சூரியகுமார், பொள்ளாச்சி கனரா வங்கி வேளாண்மை அதிகாரி சதீஷ்குமார் மற்றும் விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## பொள்ளாச்சிக்கு வரத்து அதிகரித்ததால் வெங்காயம் விலை வீழ்ச்சி



பொள்ளாச்சி வெங்காயம் வரத்து அதிகரித்ததால் விலை வீழ்ச்சி அடைந்தது.

<u>வெங்காயம்</u>

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு தினமும் ஆந்திரா, கர்நாடகா, மகாராஷ்டிரா போன்ற மாநிலங்களில் இருந்து பெரிய வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. மேலும் தாராபுரம், ஒட்டச்சந்திரம் போன்ற பகுதியில் இருந்தும் சில நேரங்களில் வெங்காயம் விற்பனைக்கு வரும்.

இங்கிருந்து உள்ளூர் தேவைக்கும், கேரளாவுக்கு வெங்காயத்தை வாங்கி செல்கிறார்கள். இந்த நிலையில் வடமாநிலங்களில் ஏற்பட்ட மழை உள்பட இதர பாதிப்புகள் காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வெங்காயம் வரத்து குறைந்து போனது. இதனால் விலை அதிகரித்தது. தற்போது மீண்டும் வரத்து அதிகரித்ததால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது:–

<u>வரத்து அதிகரிப்பு</u>

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு கடந்த மாதம் வடமாநிலங்களில் இருந்து வெங்காயம் வரத்து குறைவாக இருந்தது. இதனால் விலை அதிகரித்தது. முதல் தர வெங்காயம் ஒரு கிலோ ரூ.50–க்கும், 2–ம் தர வெங்காயம் ஒரு கிலோ ரூ.40–க்கும் விற்பனை செய்யப்பட்டது.

தற்போது வடமாநிலங்களில் இருந்தும், குறிப்பாக கர்நாடகாவில் இருந்தும் வெங்காயம் வரத்து அதிகரித்து உள்ளது. மேலும் தாராபுரம் பகுதியில் இருந்தும் வெங்காயம் விற்பனைக்கு வருகிறது. வரத்து அதிகரித்துள்ளதால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதன்படி முதல்தர வெங்காயம் ஒரு கிலோ ரூ.38–க்கும், 2–ம் தர வெங்காயம் ஒரு கிலோ ரூ.25–க்கும் விற்பனை செய்யப்படுகிறது. இன்னும் வரும் நாட்களில் வெங்காயம் வரத்து அதிகரிக்கும். இதன் மூலம் மேலும் விலை வீழ்ச்சி ஏற்பட வாய்ப்புகள் உள்ளன.

இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

## புதுச்சேரியில் குவிந்த சுற்றுலா பயணிகள்



புதுச்சேரி

புதுச்சேரியில் சுற்றுலா பயணிகளின் கூட்டம் நேற்று வழக்கத்தைவிட அதிகமாக இருந்தது.

<u>சுற்றுலா பயணிகள்</u>

புதுவையில் வார இறுதி நாட்களில் சுற்றுலா பயணிகளின் வருகை அதிக அளவில் இருக்கும். குறிப்பாக சென்னை, பெங்களூர் பகுதியை சேர்ந்த சுற்றுலா பயணிகள் இந்த நாட்களில் புதுச்சேரி வந்து குவிவார்கள்.
வெள்ளிக்கிழமை மாலையில் புதுவை வரும் சுற்றுலா பயணிகள் ஞாயிற்றுக்கிழமை வரை தங்குவார்கள். ஞாயிற்றுக்கிழமை மாலை முதல் அவர்கள் தங்கள் ஊர்களுக்கு திரும்ப ஆரம்பிப்பார்கள்.
இதன்படி புதுவையில் நேற்று சுற்றுலா பயணிகளின் வருகை அதிகமாக இருந்தது. அவர்களுக்கு இதமளிக்கும் வகையில் நேற்று காலை புதுவையில் இதமான சூழ்நிலை நிலவியது. இதன் காரணமாக கடற்கரையில் வழக்கத்தைவிட கூட்டம் அதிகமாக இருந்தது.

அலைமோதியது

இதேபோல் சுண்ணாம்பாறு படகு குழாம், மணக்குள விநாயகர் கோவில், தாவரவியல் பூங்கா உள்ளிட்ட பல்வேறு இடங்களிலும் சுற்றுலா பயணிகளின் கூட்டம் அலைமோதியது. அதேபோல் சண்டே மார்க்கெட்டிலும் மக்கள் அதிக அளவு திரண்டிருந்தனர்.
சுற்றுலா பயணிகளின் வருகை அதிகமாக இருந்ததால் நகரப்பகுதியில் வெளிமாநில பதிவெண் கொண்ட கார்கள் அதிக அளவில் வலம் வந்தன. இதன் காரணமாக நகரப்பகுதியில் அவ்வப்போது போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.

தினகரன்

**தென்மாவட்டங்களில் பலத்த மழை பெய்யும்**




சென்னை: ெவப்ப சலனம் நீடிப்பதை அடுத்து 9 மாவட்டங்களில் இரண்டு நாட்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வடகிழக்கு பருவமழை தொடங்க இன்னும் 8 நாட்கள் உள்ள நிலையில் தென் மேற்கு பருவமழை இன்னும் முடிவுக்கு வரவில்லை. தற்போது தமிழகத்தில் வெப்ப சலனம் காரணமாக ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. அத்துடன் தென் மேற்கு பருவமழை கேரளாவில் பெய்வதை அடுத்து தமிழகத்திலும் மழை பெய்கிறது. அதிகபட்சமாக நேற்று திருவாலங்காட்டில் 90 மிமீ மழை பெய்துள்ளது.

ஈரோடு 80 மிமீ, தஞ்சாவூர் 70 மிமீ, · பெரும்புதூர் 60 மிமீ, செய்யார், பூண்டி, பள்ளிப்பட்டு, வேலூர் 50 மிமீ, கமுதி 40 மிமீ, அதிராம்பட்டினம், கொடைக்கானல், பூந்தமல்லி, செம்பரம் பாக்கம் 30 மிமீ மழை பெய்துள்ளது. இதையடுத்து, வெப்ப சலனம் தொடர்ந்து நீடிக்கிறது. மேலும், கேரளா, கர்நாடாக மாநிலங்களில் தென் மேற்கு பருவமழை மேலும் தீவிரம் அடைந்து மழை பெய்து வருகிறது. இதனால் தென் மாவட்டங்களில் ராமநாதபுரம், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி, மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இடியுடன் கூடிய கனமழை பெய்யும்.

வட மாவட்டங்களில் வெப்ப சலனம் காரணமாக மாலை மற்றும் இரவு நேரங்களில் இடியுடன்கூடிய மழை பெய்யும்.

**கறிக்கோழி விலை மீண்டும் சரிந்தது**



கோவை: தமிழகத்தில் கறிக்கோழி உற்பத்தியாளர்கள் தினசரி விலையை நிர்ணயிக்கின்றனர். இதன்படி நேற்று மொத்த கொள்முதல் விலை ரூ.55க்கு சரிந்துள்ளது. சில்லரை விற்பனையில் உயிருடன் கறிக்கோழி கிலோ ரூ.70க்கும், தோலுடன் ரூ.95க்கும், தோல் நீக்கியது ரூ.110க்கும் நிர்ணயிக்கப்பட்டது. அதாவது, கடந்த 10 மாதத்துக்கு பிறகு இம்மாதம் மீண்டும் சரிந்துள்ளது.

**1.30 கோடிக்கு மஞ்சள் விற்பனை**



திருச்செங்கோடு: திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில், 100 கிலோ எடை கொண்ட 2,500 மூட்டை மஞ்சள் 1.30 கோடிக்கு விற்பனையானது. நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நேற்று மஞ்சள் ஏலம் நடந்தது. இந்த ஏலத்தில் ஆத்தூர், கெங்கவல்லி, கூகையூர், கள்ளக்குறிச்சி, பொம்மிடி, அரூர், ஜேடர்பாளையம், பரமத்திவேலூர், நாமக்கல், மேட்டூர், பூலாம்பட்டி ஆகிய பகுதிகளிலிருந்து விவசாயிகள் மஞ்சளை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

இதனை கொள்முதல் செய்ய ஈரோடு, ராசிபுரம், நாமகிரிப்பேட்டை, சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 30க்கும் மேற்பட்ட வியாபாரிகள் வந்திருந்தனர். டெண்டர் மூலம் 2,500 மூட்டை மஞ்சள் 1.30 கோடிக்கு விற்பனையானது. விரலி ரகம் குவிண்டாலு–ுகு (100கிலோ) 6,200 முதல் 9,689 வரையும், கிழங்கு ரகம் 6,459 முதல் 8,015 வரையும், பனங்காளி ரகத்திற்கு 6,009 முதல் 17,119 வரையும் விலை கிடைத்தது.

**சிக்கன் ருசிப்பது 12% உயர்வு**




மும்பை: இந்தியாவில் சிக்கன் சாப்பிடுவோர் எண்ணிக்கை பல மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் உலக அளவில் கணிசமான சிக்கன் சந்தையை இந்தியா பெற்றுள்ளது தெரிய வந்துள்ளது என்று தேசிய மாதிரி சர்வே கூறுகிறது. இரண்டாண்டு வரை பர்கர் வகை பாஸ்ட் புட் உணவுகள் தான் முதலிடத்தில் இருந்தன. ஆனால், மொத்தத்தில் சிக்கன் அதை பின்னுக்கு தள்ளி விட்டது. 24 கோடி டாலராக இருந்த இந்த சிக்கன் சந்தை இப்போது 30 கோடி டாலரை தாண்டி விட்டது. அதாவது, 12 சதவீதம் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**ஆப்பிள் தக்காளி வரத்து அதிகரிப்பு**

கோவை, : கோவையில் ஆப்பிள் தக்காளி வரத்து அதிகரிப்பதால் இதன் விலை குறைந்து வருகிறது. தமிழகத்தில் கோவை, திருப்பூர் மாவட்டத்தில் ஆப்பிள் தக்காளி அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சாகுபடி அதிகரிப்பு காரணமாக அறுவடையாகும் தக்காளி கடந்த ஆகஸ்ட் மாதம் அதிகளவில் வந்தது. இதனால் விலை சரிந்தது. அப்போது மொத்த மார்க்கெட்டில் கிலோ ரூ.6 முதல் ரூ.10 வரையும், உழவர் சந்தையில் ரூ.7 முதல் ரூ.12 வரையும், சில்லரை விற்பனை நிலையங்களில் ரூ.8 முதல் ரூ.1 ஸ்மார்ட்சிட்டி திட்டம் தொடர்பாக

தொழில் அமைப்பினருடன் மாநகராட்சி ஆலோசனை 6 வரையும் விற்றது. பின்னர் கடந்த செப்டம்பர் மாதம் வரத்து குறைய துவங்கியதால் விலை உயர துவங்கியது. மொத்த மார்க்கெட்டில் கிலோ ரூ.13 முதல் ரூ.30 வரையும், உழவர் சந்தைகளில் ரூ.15 முதல் ரூ.33 வரையும், சில்லரை விற்பனை நிலையங்களில் ரூ.25 முதல் ரூ.40 வரையும் விற்றது.இந்நிலையில் இம்மாதம்(அக்டோபர்) துவக்கம் முதல் கடந்த சில நாட்களாக வரத்து அதிகரிக்க துவங்கியது. இதனால் மொத்த மார்க்கெட்டில் ரூ.10 முதல் ரூ.20 வரையும், உழவர் சந்தைகளில் ரூ.15 முதல் ரூ.22 வரையும், சில்லரை விற்பனை நிலையங்களில் ரூ.20 முதல் ரூ.25 வரையும் சரிந்தது. வரத்து அதிகரிப்பதால் விலை மேலும் குறையும் என்கின்றனர் வியாபாரிகள். அதே போல் நாட்டு தக்காளியும் வரத்து அதிகரிக்க துவங்கியுள்ளதால் அதன் விலையும் சரிந்து வருகிறது. மொத்த மார்க்கெட்டில் ரூ.8 முதல் ரூ.14 வரையும், உழவர் சந்தையில் ரூ.10 முதல் ரூ.16 வரையும், சில்லரை விற்பனை நிலையங்களில் ரூ.12 முதல் ரூ.20 வரையும் விற்கிறது.

**வேளாண் துணை இயக்குனர் ஆய்வு**

உளுந்தூர்பேட்டை, : உளுந்தூர்பேட்டை அருகே திருநாவலூர் ஒன்றியத்தில் உள்ள விவசாய நிலங்களில் நெல் நடவு, இயந்திர முறைப்படி நடைபெற்று வருகிறது. இந்நிலையில் திருநாவலூர் கிராமத்தில் உள்ள விவசாயி தினகரன் என்பவரின் நிலத்தை விழுப்புரம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் ரவி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆய்வின் போது, இயந்திர முறையில் நெல் நடவு செய்யும் போது அதன் மூலம் அதிக அளவு மகசூல் பெறும் முறைகள் குறித்தும், அரசு ரூ.3 ஆயிரம் மானியம் வழங்குவதை பெறும் வழிமுறைகள் குறித்தும் விளக்கி கூறினார். வேளாண்மை அலுவலர் அர்வின்ராஜ், உதவி வேளாண்மை அலுவலர்கள் கோபாலகிருஷ்ணன், ராஜேஷ் உள்ளிட்ட அதிகாரிகள், விவசாயிகள் கலந்துகொண்டனர்.

## கோழிக்கொண்டை பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

மயிலம், : வீடூர் பகுதியில் கோழிக்கொண்டை பூக்களை பயிரிடுவதில் விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகின்றனர். மயிலம் அடுத்த வீடூர் பகுதியில் பயிரிடப்படும் கோழிக்கொண்டை பூவானது ஒரே மாதத்தில் வளர்ந்து பயனளிக்கிறது. செலவும் மிக குறைவு. ஆகவே இப்பகுதி விவசாயிகள் கோழிக்கொண்டை பயிரிடுவதில் அதிகம் ஆர்வம் காட்டி வருகின்றனர். 30 சென்ட்டில் பயிரிடப்பட்ட கோழிக்கொண்டை பூவானது ஒரு நாளைக்கு 50 கிலோ வரை மகசூலை கொடுக்கும். பூக்கத் துவங்கியதும் தொடர்ச்சியாக 5 நாட்கள் பூக்களை பறிக்கலாம். பின்னர் 4 நாட்கள் கழித்து மறுபடியும் பூப்பறிக்கலாம். மாதத்தில் 20 நாட்கள் பூக்களை பறித்து விற்பனை செய்யலாம். இங்கு பறிக்கப்படும் பூக்கள் திண்டிவனத்தில் உள்ள பூ மார்க்கெட்டிற்கு கொண்டு செல்லப்படுகிறது. தற்போது விலை ரூ.30க்கு வாங்கப்படுகிறது.

## தரமற்ற விதைகள் விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

கள்ளக்குறிச்சி,: கள்ளக்குறிச்சி கோட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் நடைபெற்றது. கோட்டாட்சியர் மாலதி தலைமை வகித்தார். வட்டாட்சியர்கள் சையத்காதர், பன்னீர்செல்வம், பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் மணிவண்ணன் வரவேற்றார். விவசாயிகள் ராமசாமி, குலசேகரஆழ்வார், கலியபெருமாள், அய்யனார், செல்வராசு, முகமதுஅலி, நடராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் விவசாயிகள் பேசுகையில், கோமுகி அணை வாய்க்கால், 24 கிலோ மீட்டர் தூரம் கிராம ஏரிகளுக்கு செல்லும் வாய்க்காலை சுத்தம் செய்ய வேண்டும். சங்கராபுரம் மற்றும் மூங்கில்துறைப்பட்டு சுற்றியுள்ள

கிராம பகுதிக்கு செல்லும் வாய்க்காலை 100 நாள் வேலை திட்டத்தின் கீழ் சுத்தம் செய்ய வேண்டும். எஸ். கொளத்தூர் கிராம ஏரியில் கட்டப்பட்ட பாலம் மூன்று ஆண்டுகள் ஆகியும் பணி முழுமையாக முடிக்கவில்லை விரைந்து முடிக்க வேண்டும். அனுமதி பெறாமல் உரக்கடை நடத்துகின்றனர். அதனை அதிகாரிகள் ஆய்வு செய்ய வேண்டும். தரமற்ற விதைகள் விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். உரம் விலை பட்டியல் கடை முன்பு எழுதப்பட வேண்டும். விலை பொருட்கள் அரசு மானியம் அறிவிப்பு வேளாண்மைதுறை அதிகாரிகள் முறையாக விவசாயிகளுக்கு தெரியப்படுத்த வேண்டும். விவசாய பயிர்கள் முன்எச்சரிக்கை நோய் தடுப்பு விவரங்களை வாரத்திற்கு ஒருமுறை கிராமங்களில் தோட்டக்கலைதுறை அலுவலர்கள் மூலமாக விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஏரி, ஓடை வாய்க்கால் தூர் வார வேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், என பேசினர்.

**விதிமுறை அடிப்படையில் வைகை, பெரியாறில் இருந்து நீர் திறக்க வலியுறுத்தல் பாசன விவசாயிகள் கலெக்டரிடம் மனு**

சிவகங்கை, : ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை மாவட்ட விவசாய பாசன பகுதிகள் பயனடையும் வகையில் வைகை, முல்லை பெரியாற்றில் இருந்து நீர் திறக்க வேண்டும் என வைகைபாசன விவசாயிகள் சங்கம் சார்பில் கலெக்டர் மலர்விழியிடம் மனு அளிக்கப்பட்டது. அந்த மனுவில், ‘‘சிவகங்கை, ராமநாதபுரம், மதுரையில் பூர்வீக வைகை பாசன பகுதி விவசாய நிலங்கள் உள்ளது. நடப்பு ஆண்டில் இந்த மாதத்தில் விவசாயத்திற்கான முதற்கட்ட பணிகள் தொடங்கி நடக்க வேண்டும். தற்போது முல்லை பெரியார், வைகை அணையிலும் நீர் உள்ளது. வைகை அணையில் சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை கணக்கில் ஆயிரத்து 900மி.கன அடி திறந்துவிட வேண்டும். ஆயிரத்து 500மி.கன அடி நீர் இருந்தால் விவசாயத்திற்கு திறந்து விட வேண்டும் என விதிமுறை உள்ளது.எனவே விதிமுறை அடிப்படையில் வைகையிலும்

மற்றும் முல்லை பெரியாறு அணையிலும் நீர்திறக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில்தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொதுமக்களை கவர்ந்த அலங்கார மீன் கண்காட்சி**

புதுச்சேரி, : புதுச்சேரி மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை சார்பில் அலங்கார மீன் கண்காட்சி அண்ணா திடலில் நேற்று துவங்கியது.அமைச்சர் பன்னீர்செல்வம் தலைமை தாங்கினார். அமைச்சர் தியாகராஜன் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக முதல்வர் ரங்கசாமி கலந்து கொண்டு கண்காட்சியை தொடங்கி வைத்து பார்வையிட்டார். நிகழ்ச்சியில் சிறப்பு செயலர் கரிகாலன், சேர்மன் மதி என்கிற வெங்கடேசன் மீன்வளத்துறை இயக்குனர் மேரி சின்னராணி மற்றும் மீன்வளத்துறை அதிகாரிகள், அலங்கார மீன் விற்பனையாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். இக்கண்காட்சியில் அரசு சார்ந்த நிறுவனங்கள், அலங்கார மீன் விற்பனையாளர்கள் மற்றும் சுய உதவி குழுக்கள் சார்பில் 24 அலங்கார மீன் காட்சியக அரங்குகள், 6 மீன் உணவு மற்றும் பல்வேறு உணவு விற்பனை அரங்குகள் என 30 அரங்குகள் அமைக்கப்பட்டிருந்து. இந்த அலங்கார மீன் காட்சியகத்தில் வாஸ்து மீன்களான அரோவோனா, பூக்கொண்டை மீன், இதர நன்னீர் அலங்கார மீன்களான தங்கமீன், தேவதை மீன், ஆஸ்கார் மீன், நன்னீர் சுறா வகை மீன்கள், ஆபரண மீன், குராமிமீன், டெட்ரா வகை மீன்கள், மோலிஸ், கத்திமீன், பென்சில் மீன், கப்பிஸ், பிளாட்டிஸ், கம்பூசியா, ஈயத்தாள் மடி பார்ப் மீன் என பல விதமான மீன்கள் இடம் பெற்றிருந்தன. இதேபோல் கடல் சார்ந்த அலங்கார மீன்களான நீளடேம்சல், ஸ்டார்ஜியன், பாகிஸ்தானி வண்ணத்துப்பூச்சி மீன், கோமாளி மீன், கடல் தேவதை மீன் போன்ற வண்ணமயமான மீன்களும் இடம் பெற்றிருந்தன. மேலும், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, மீன்வளர்ப்போர் மேம்பாட்டு முகமை மற்றும்

காமராஜர் வேளாண் அறிவியல் மையம் சார்பிலும் பலவகையான மீன் தொட்டிகள் வைக்கப்பட்டிருந்தது. இவை பொதுமக்கள் மற்றும் சிறுவர்களை வெகுவாக கவர்ந்தன.நேற்று தொடங்கி நாளை வரை நடைபெறும் கண்காட்சியை, பொதுமக்கள் காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரை பார்வையிடலாம்.

**பால் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி**

ஒரத்தநாடு, : ஒரத்தநாடு கால்நடை மருத்துவக்கல்லூரியில் பாரம்பரிய பால் பொருட்கள் தயாரிப்பு பயிற்சி முகாம் நடந்தது. இதன் நிறைவு விழாவில் பயிற்சி சான்றிதழ், பயிற்சி கையேட்டை கல்லூரியின் முதல்வர் செல்வக்குமார் வழங்கினார். பின்னர் அவர் ேபசியதாவது: தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின்கீழ் மண்டல பால் தொழில் முனைவோருக்கான பயிற்சி மையம் கால்நடை மருத்துவக்கல்லூரியில் செயல்பட்டு வருகிறது. இங்கு பாலை பாதுகாப்பான முறையில் கையாளுதல், பால் நுண்ணுயிரியல் தொழில்நுட்ப பயிற்சி, பாலின் தரக்கட்டுப்பாடு போன்ற பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்றார்.

**சம்பா பருவ நெல் விதை கிலோவுக்கு ரூ.10 மானியம்**

திருக்காட்டுப்பள்ளி, : பூதலூர் வேளாண்மை வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்தில் விநியோகம் செய்யப்படும் அனைத்துரக நெல் விதைகளுக்கும் கிலோ ஒன்றுக்கு ரூ.10 மானியம் வழங்கப்படுகிறது. தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வட்டாரத்தில் நடப்பு சம்பா பருவத்துக்கு தேவையான விதைநெல் போதுமான அளவு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. தேசிய உணவு பாதுகாப்பு இயக்கத்தின்கீழ் சொர்ணா சப்1. ஆடுதுறை 46, ஆடுதுறை 49, கோ(ஆர்) 50 ஆகிய நெல் ரகங்கள் கிலோவுக்கு ரூ.10 மானியத்தில் வழங்கப்படுகிறது. இதர ரகங்களான கோ 43, ஆடுதுறை 39 ஆகிய நெல்விதைகள் விதை கிராம திட்டத்தில் கிலோவுக்கு ரூ.10 மானியத்தில் வழங்கப்படுகிறது. விவசாயிகள் தங்கள் பகுதி உதவி

வேளாண்மை அலுவலரிடம் பரிந்துரை பெற்று பூதலூர், செங்கிப்பட்டி, திருக்காட்டுப்பள்ளி, அகரப்பேட்டை வேளாண்மை விரிவாக்க மையங்களில் இதனை பெற்று பயனடையலாம். இவ்வாறு வேளாண்மை அதிகாரி பிரபாகர் தெரிவித்துள்ளார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தமிழகத்தில் 2 நாட்களுக்கு மழை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் இன்னும் 2 நாட்களுக்கு மழை நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

அரபிக்கடலில் உருவாகிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் காரணமாக கர்நாடகம், கேரளம், தெலுங்கானா மற்றும் தமிழகத்தின் வட மாவட்டங்களில் நேற்று முன்தினம் பரவலாக கன மழை பெய்தது.

வேலூரில் அதிகபட்சமாக 5 செ.மீ., நீலகிரியில் 4, திருப்பத்தூரில் 3, திண்டுக்கல், திருவள்ளூர் மற்றும் சென்னையில் 2 செ.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

இந்நிலையில், இன்றும் நாளை யும் தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் மழை அல்லது இடி யுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும், தென் மாவட்டங்களில் ஆங்காங்கே கன மழை பெய்யக் கூடும் என்றும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

14-ம் தேதி வட தமிழகத்தில் ஒரு சில இடங்களில் கன மழைக்கு வாய்ப்பிருப்பதாகவும் கூறியுள் ளது.

தென்மேற்கு பருவமழை இறுதிக்கட்டத்தை எட்டியுள்ள நிலையில் கடந்த 11 நாட்களில் இயல்பைவிட திருவள்ளூர், காஞ்சிபுரம், கன்னியாகுமரி,

புதுக்கோட்டை மாவட்டங்களில் அதிக மழை பெய்துள்ளது. சென்னைக்கு இயல்பைவிட 28 சதவீதம் அதிக மழை கிடைத்துள்ளது.

**மீத்தேன் வாயு திட்டத்துக்கு தமிழக அரசு தடை**



காவிரி டெல்டா மாவட்டங்களில் மீத்தேன் வாயு எடுக்கும் திட்டத்துக்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது. இது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ள தனியார் நிறுவனத்துக்கு அனுமதி மறுத்துள்ளதாகவும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

இதுகுறித்து திருவாரூர் மாவட்ட ஆட்சியர் மா.மதிவாணன் நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பு: காவிரி டெல்டா மாவட்டங்களில் மீத்தேன் வாயு குறித்து ஆய்வு செய்து, எரிவாயு உற்பத்தி செய்ய ‘கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் லிமிடெட்’ என்ற நிறுவனத்துக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதாகவும், இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் மண் வளம் வெகுவாகப் பாதிக்கப்படும் என்றும், நிலத்தடி நீர்மட்டம் குறையும் என்றும் விவசாயிகள் கவலை தெரிவித்தனர்.

இதையடுத்து, தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த 17-7-2013-ல் வெளியிட்ட அறிக்கையில், மீத்தேன் திட்டத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புகள் குறித்து ஆய்வு நடத்த வேண்டிய அவசியத் தைத் தெரிவித்து, அதற்கான ஆய்வை மேற்கொள்ள சென்னை அண்ணா பல்கலைக்கழகம், சென்னை இந்திய தொழில்நுட்பக் கழகம், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், எம்.எஸ்.சுவாமிநாதன் ஆராய்ச்சி மையம்

ஆகியவற்றைச் சேர்ந்த வல்லுநர்கள் மற்றும் பொதுப்பணித் துறை, வேளாண்மைத் துறை, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தொழில் வளர்ச்சிக் கழகம் ஆகியவற்றைச் சேர்ந்த அலுவலர்களைக் கொண்ட குழு அமைக்கப்படும் எனத் தெரிவித்திருந்தார். மேலும், அந்தக் குழு 3 மாதங்களில் அறிக்கை சமர்ப்பிக்குமாறும் முதல்வர் உத்தரவிட்டிருந்தார்.

இதையடுத்து, தொழில்நுட்ப வல்லுநர் குழு அரசுக்கு தனது அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. தொழில்நுட்ப வல்லுநர் குழு தெரிவித்துள்ள பரிந்துரைகளை கவனமாகப் பரிசீலித்த தமிழக அரசு, அந்தக் குழுவின் பரிந்து ரையை ஏற்றுள்ளது. காவிரி டெல்டா பகுதியில் சுமார் 691 கி.மீ. பரப்பில், கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன் லிமிடெட் நிறுவனம் செயல்படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ள திட்டத்துக்கு, தமிழக அரசால் எந்த ஒரு அனுமதியும் வழங்கப்படாது என்று முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

மேலும், காவிரி டெல்டா பகுதியில், நிலக்கரிப் படுகை மீத்தேன் எரிவாயு வெளிக் கொணர்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான செயல்பாடுகளை மத்திய அரசு கைவிட வேண்டும் என்றும், எதிர்காலத்தில் இது போன்ற எவ்விதமான முயற்சியை யும் தொடங்குவதற்கு முன்னர் தமிழக அரசைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்றும் மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## கனமழையால் குண்டேரிபள்ளம் அணை மீண்டும் நிரம்பியது: கரையோர மக்களுக்கு வெள்ளை அபாய எச்சரிக்கை



டி,என்.பாளையம், அக். 12–

ஈரோடு மாவட்டத்தில் நேற்று அனைத்து பகுதிகளிலும் இடி–மின்னலுடன் கனமழை பெய்தது.

வனப்பகுதிகளான சத்தியமங்லம், ஆசனுார், தாளவாடி, அந்தியூர் மற்றும் கடம்பூர் பகுதிகளிலும் இரவு முதல் விடிய விடிய மழை பெய்தது.

இந்த கனமழையால் வனப்பகுதியில் உள்ள ஓடைகளில் தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

கடம்பூர் வனப்பகுதியில் பெய்த பலத்த மழையால் அதன் அடிவாரத்தில் உள்ள குண்டேரி பள்ளம் அணை மீண்டும் நிரம்பியது.

மேலும் கோபி, டி.என். பாளையம் பகுதியிலும் குண்டேரி பள்ளம் அணை பகுதியிலும் பலத்த மழை பெய்ததையொட்டி குண்டேரி பள்ளம் அணைக்கு வரும் தண்ணீர் அப்படியே வெளியேற்றப்பட்டு வருகிறது. வினாடிக்கு 898 கனஅடி தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இதனால் குண்டேரி பள்ளம் அணைபகுதியை யொட்டி உள்ள கொங்கர் பாளையம், கவுண்டம் பாளையம், வாணிப்புத்தூர், கள்ளியங்காடு ஆகிய கரையோர கிராம மக்களுக்கு அதிகாரிகள் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரில் யாரும் இறங்கி குளிக்க வேண்டாம் எந்த நேரத்திலும் தண்ணீர் அதிகரிக்க கூடும் என அதிகாரிகள் எச்சரித்து உள்ளனர்.

**ஈரோடு மாவட்டத்தில் இரவு முழுவதும் கொட்டிய மழை**



ஈரோடு, அக்.12–

ஈரோடு உள்பட மாவட்டம் முழுவதும் கடந்த 2 நாட்களாக மீண்டும் வெயில் சுட்டெரித்தது. இந்த நிலையில் ஈரோடு மாவட்டம் முழுவதும் நேற்று இரவு திடீரென மழை பெய்தது.

பெரும்பாலான இடங்களில் இரவு 10 மணிக்கு மேல் பெய்ய தொடங்கிய மழை விடிய.. விடிய கொட்டியது.

ஈரோடு நகரில் நேற்று மாலை 6.30 மணிக்கு திடீரென மேக கூட்டங்கள் சூழ்ந்தது. இடியும் மின்னலும் இருந்தது. தொடர்ந்து மழை துளிகளும் விழுந்தது.

இரவு 9 மணிக்கு மேல் சாரல் மழையாக பெய்யத் தொடங்கிய மழை போக போக கன மழையாக கொட்டியது.

இன்று (திங்கட்கிழமை) காலை முதல் தொடர்ந்து அடைமழை பெய்தது.

இரவு முதல் விடிய..விடிய மழை பெய்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதித்தது. அலுவலகம் மற்றும் வேலைக்கு போவோர்கள்

அவதிப்பட்டனர். மேலும் மழை தொடர்ந்து பெய்ததால் பள்ளிக்கு விடுமுறை விடப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. மாவட்ட முதன்மை கல்வி அலுவலரிடம் கேட்ட போது, "மழை காலையில் குறைந்து விட்டது" என்று கூறினார். இதனால் பள்ளிக்கு விடுமுறை அளிக்கவில்லை.

இதனால் மாணவ– மாணவிகள் ‘குடை’ பிடித்தப்படி பள்ளிக்கூடம் சென்றனர். பல பெற்றோர் தங்கள் குழந்தைகளை ஆட்டோவில் ஏற்றியும், மோட்டார் சைக்கிளிலும் கொண்டு விட்டனர்.

மாவட்டத்தில் அதிகபட்சமாக கோபி மற்றும் அதன் சுற்றுபுறத்தில் மழை பெய்தது. கோபி பகுதியில் மட்டும் 91 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது. இதனால் தாழ்வான பகுதியில் மழை தண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது.

கோபி நகரின் மையப் பகுதியில் கீரிப்பள்ளம் ஓடையில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொண்டு ஓடியது. கொளப்பலூர், செவியூர், மொடச்சூர், அளுக்குளி, கூகலூர், கரட்டடிபாளையம், குள்ளம் பாளையம், பொலவகாளி பாளையம் உள்பட சுற்றுவட்டார பகுதிகளிலும் கனமழை கொட்டி தீர்த்தது.

இதேபோல் நம்பியூர் பகுதியிலும் நேற்று மழை கொட்டி தீர்த்தது. வறண்ட பூமியான நம்பியூர் மற்றும் அதன் சுற்றுப்புற கிராமங்களிலும் இரவு முழுவதும் மழை விடாமல் பெய்தது.

நம்பியூரில் 87 மில்லி மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

சத்தியமங்கலம், பு.புளியம்பட்டி, பவானிசாகர் மற்றும் தாளவாடி, ஆசனூர், திம்பம், தலமலை, கடம்பூர், அந்தியூர், பர்கூர் ஆகிய வனப்பகுதிதளிலும் நேற்று இரவு முதல் விடிய.. விடிய மழை பெய்தது.

இந்த மழையால் வனப்பகுதி முழுவதும் பசுமையாக மாறி வருகிறது. வன விலங்குகளின் தண்ணீர் பஞ்சமும் தீர்ந்து உள்ளது. இதேபோல் பவானி,

அம்மாபேட்டையிலும் நேற்று இரவு நல்ல மழை பெய்தது. இந்த மழையால் அப்பகுதி முழுவதும் குளிர்ச்சியாக காணப்பட்டது.

அம்மாபேட்டை, அதன் சுற்றுப்புற பகுதிகளான சிங்கம்பேட்டை, நெரிஞ்சிபேட்டை, சித்தார், காடப்ப நல்லூர் ஆகிய பகுதிகளில் மழை கொட்டியது.

மேலும் பெருந்துறை, சென்னிமலை, கவுந்தப்பாடி உள்பட ஈரோடு மாவட்டம் முழுவதும் மழை கொட்டியது.

பெருந்துறை அருகே பெரிய மடத்து பாளையம் பகுதியில் சீனிவாசன் என்ற விவசாயியின் வீடு இடிந்து விழுந்தது. இதில் வீட்டில் இருந்தவர்கள் காயமின்றி தப்பினர்.

ஈரோடு மாவட்டத்தில் நேற்று இரவு பெய்த மழை அளவு மில்லி மீட்டரில் வருமாறு:–

கவுந்தப்பாடி–52.2, அம்மாபேட்டை–43.2, ஈரோடு–35, பவானிசாகர்–17.

## விவசாயத்திற்கு இளைஞர்கள் ஆக்கமும், ஊக்கமும் தரவேண்டும்: அமைச்சர் வைத்திலிங்கம்




தஞ்சாவூர், அக்.11–

தஞ்சை புதுக்கோட்டை ரோட்டில் உள்ள இந்திய பயிர்பதன தொழில்நுட்ப கழக வளாகத்தில் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி

நிறுவனத்தின் சார்பில் இளம் விவசாயிகளை விவசாயத்தில் ஈர்ப்பதற்கான திறன் மேம்பாட்டு பயிற்சி 2 நாட்கள் நடந்தது. இதன் தொடக்க விழா நேற்று நடந்தது.

விழாவிற்கு மாவட்ட கலெக்டர் சுப்பையன் தலைமை தாங்கினார். வேளாண்மை இயக்குநர் ராஜேந்திரன் முன்னிலை வகித்தார்.

பயிற்சினை அமைச்சர் வைத்திலிங்கம் தொடங்கி வைத்து பேசும்போது கூறியதாவது:–

தமிழ்நாட்டில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா வழிகாட்டுதலில் 2–ம் பசுமை புரட்சி திட்டத்தின்கீழ் இந்த வருடம் 1 லட்சத்து 28 ஆயிரம் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில் தமிழக விவசாய துறை இந்தியாவில் பல விருதுகளை பெற்று பெருமை அடைந்துள்ளது.

100 விவசாயிகள் வெளிநாடுகளுக்கு சென்று பயிற்சி மேற்கொள்ளும் திட்டத்தினை முதல்– அமைச்சர் அறிவித்துள்ளார். விவசாயிகள் சீனா, பிரான்ஸ், இத்தாலி போன்ற நாடுகளுக்கு சென்று அவர்கள் மேற்கொள்ளும் விவசாய முறையினை தெரிந்து கொண்டு அதை தமிழ்நாட்டில் செயல்படுத்துவதற்கான திட்டத்தினை முதல்– அமைச்சர் அறிவித்துள்ளார்.

அதேபோல் 1000 விவசாயிகளை வெளி மாநிலங்களுக்கு சென்று தோட்டக்கலை பயிற்சிகள் மேற்கொள்ள அறிவுறுத்தியுள்ளார். அவர்கள் தொழில் செய்யும் முறை, இயற்கை உரம் பயன்படுத்துதல், செயற்கை உரம் பயன்படுத்துதல் ஆகியவை பற்றி அறிந்து வருவார்கள். குறைந்த நிலபரப்பில், குறைந்த தண்ணீரில் அதிக உற்பத்தி செய்து புரட்சி செய்ய இளம் விவசாயிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக இந்த பயிற்சி நடக்கிறது. இளம் விவசாயிகளுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி மூலமாக இளம் விவசாயிகளை உருவாக்குவதே இதன் நோக்கமாகும். இந்த ஆண்டு சர்வதேச மண் ஆண்டாக அறிவித்துள்ளார்கள். ஆனால் பல ஆண்டுகளுக்கு முன்பே முதல்–அமைச்சர் ஒவ்வொரு விவசாயிக்கும்

அவரது நிலத்தினை பற்றி அறிந்து கொள்ளும் தகவல் அடங்கிய மண்வள அட்டையினை வழங்கியுள்ளார். இதன் மூலம் 65 லட்சம் அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் வாழ்க்கை தரம் உயர பல்வேறு மானிய உதவிகளை வழங்க பலகோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி இளம் விவசாயிகள் இன்னும் பல சாதனைகளை செய்து சாதிக்க வேண்டும். விவசாயத்திற்கு இளைஞர்கள் ஆக்கமும், ஊக்கமும் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

விழாவில் அம்மா பண்ணை மகளிர் திறன் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் 22 அம்மா பண்ணை மகளிர் குழுக்களுக்கு அமைச்சர் பதிவு சான்றுகள் மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

விழாவில் எம்.எல்.ஏ.க்கள் ரெங்கசாமி, ரெத்தினசாமி, மேயர் சாவித்திரிகோபால், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் அமுதாரவிச்சந்திரன், மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் துரை. திருஞானம் உள்பட இளம் விவசாயிகள், மாணவ,மாணவிகள் பலர் கலந்து கொண்டனர்.

## பாசனத்துக்காக திருமூர்த்தி அணை திறப்பு: ஜெயலலிதா அறிவிப்பு



சென்னை, அக். 11–

முதல்–அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

திருப்பூர் மாவட்டம், திருமூர்த்தி அணையிலிருந்து பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம், பாலாறு பழைய ஆயக்கட்டு தளி வாய்க்கால் பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி தளி வாய்க்கால் வடபூதிநத்தம் பாசன விவசாயிகள் சங்கம் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நான்காம் மண்டல பாசனத்திற்கு தண்ணீர் திறந்துவிடக் கோரி திருமூர்த்தி நீர்த்தேக்க திட்டக்குழு உள்ளிட்ட கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களிடமிருந்து எனக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

வேளாண் பெருமக்களின் வேண்டுகோளினை ஏற்று, திருமூர்த்தி அணையிலிருந்து, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டம் பாலாறு பழைய ஆயக்கட்டு தளி வாய்க்கால் பாசனத்திற்காகவும் மற்றும் திருப்பூர் மாவட்டத்தில் உள்ள நான்காம் மண்டல பாசனத்திற்காகவும் 12.10.2015 முதல் தண்ணீர் திறந்து விட நான் ஆணையிட்டுள்ளேன்.

இதனால், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் உள்ள 96,854 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அதில் கூறியுள்ளார்.